Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY    தேசிய தினசரி

பாண 389    தபாற் பெட்டி எண் 49

மலர் 4    யாழ்ப்பாணம்    பிலவ    மாசி 18 ஆம் நாள்    ரம்ழான் 23    (1 3-62)    வியாழக்கிழமை    இதழ் 19




# பிரதமர் நேரு வெற்றி

## கிருஷ்ணமேனனுக்கு இதுவரை 1,06000 மெஜாரிட்டி

## மொரார்ஜி, லால்பகதூர் ஆகியோரும்வென்றனர்



புதுடில்லி, பெப். 28

புல்பூர் தொகுதியில் போட்டியிட்ட பிரதம மந்திரி திரு. ஜவஹர்லால் நேரு 64,570 அதிகப்படி வாக்குகளால் லோக சபைக்குத் தெரிவுசெய்யப்பட்டார். திரு. நேருவுக்கு 1,18,930 வாக்குகளும், அவரை எதிர்த்து நின்ற சோஷலிஸ்ட் தலைவர் டாக்டர் ராம்மனோகர் லோகியாவுக்கு 54,360 வாக்குகளும் கிடைத்தன.


வட பம்பாய்த் தொகுதியில் போட்டியிடும் பாதுகாப்பு மந்திரி கிருஷ்ண மேனன், இச்செய்தி அச்சுக்குப்போகும்வரை, அவருடன் போட்டியிடும் திரு. கிருபாளினியைவிட 1,06,000 அதிகப்படி வாக்குகளைப் பெற்றிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

மற்றும், மத்தியமந்திரிகளான திரு. மொரார்ஜி தேசாய், திரு. மனுபாய்ஷா, திரு. லால்பகதூர்சாஸ்திரி, திரு. குல்ஸாரி லால்நந்தா ஆகியோரும் லோகசபைக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

திரு. எச். வி. காமத், திரு. நாத்பாய் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். யூனியன் மந்திரி டாக்டர் கேஸ்கார் தோல்வியடைந்தார். இதுவரை 7 ராஜ்யங்களில் காங்கிரஸ் பெரும்பான்மை பலத்தைப் பெற்றுவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

## புதியகவர்னர்ஜெனரல் தேசிய உடையே அணிவார்

### உத்தியோக வைபவங்களுக்கும் இதே உடைதான்



கொழும்பு, புதன்

புதிய கவர்னர் ஜெனரல் திரு. கோபல்லவா, வைபவங்களுக்கு ஆணியும் வாளும், வாளுறையும் கொண்ட உத்தியோக உடையைக் கைவிடத் தீர்மானித்துள்ளார். புதிய கவர்னர் ஜெனரல், தேசிய உடையுடனேயே பதவிப் பிரமாணம் செய்துகொள்வார். எல்லா உத்தியோக வைபவங்களிலும் அவர் தேசிய உடையையே அணிவார். வெள்ளிக்கிழமை காலை 8-57-க்கு ராணி மாளிகையில் பதவி ஏற்புச் சடங்கு எளிய முறையில் இருக்கும். பிரதம நீதிபதி திரு. எச். எச். பஸநாயகா முன்னிலையில் இச்சடங்குகள் நடைபெறும்.

தேசிய உடையை அணியும் இரண்டாவது கவர்னர்ஜெனரலாக திரு. கோபல்லவா விளங்குவார். முதலாவதாக தேசிய உடையை அணிந்த கவர்னர் ஜெனரல் இந்தியாவில் ராஜாஜியே ஆகும்.

பௌத்த கவர்னர் ஜெனரல் ஒருவர் பதவிக்கு வருவதை முன்னிட்டு கொழும்பு பௌத்த கல்லூரி அன்றைய தினம் விடுமுறை வழங்கும்.

## லோக சபை கட்சி நிலை

புதுடில்லி, பெப். 28

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை 296 லோக சபை தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. அதன்படி கட்சி நிலை வருமாறு:

| | |
|---|---|
| காங்கிரஸ் | 217 |
| கம்யூனிஸ்ட் | 15 |
| பிரஜா சோஷலிஸ்ட் | 9 |
| ஜனசங் | 10 |
| சுதந்திரா | 5 |
| சோஷலிஸ்ட் | 6 |
| தி. மு. க. | 7 |
| கனதந்திரபரிஷத் | 4 |
| பார்வர்ட்பிளாக் | 1 |
| அகாலி | 3 |
| மற்றவை | 19 |

## அசோக்மேத்தா தோற்ருர்!

புதுடில்லி, பெப் 28

உத்தர பிரதேசத்தில் தேவுரியா தொகுதியில் நடைபெற்ற தேர்தலில் பிரஜா சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் திரு. அசோக் மேத்தா தோல்வியடைந்தார். உத்தர பிரதேச காங்கிரஸ் தலைவரும் முன்னாள் முதன் மந்திரியுமான திரு. அஸீத் பிரஸாத் ஜயினும் தோற்ருர். ஜனசங்கத் தலைவர் பார்பாயும் தோற்ருர்.

திரு. குல்ஸாரிலால்நந்தா, திரு பி. என். தத்தார் ஆகியமந்திரிமார் வெற்றி பெற்றனர்.

## பாடசாலைத் தேசிய சேவை

யாழ்ப்பாணம், புதன்

சேணியதெரு ஆங்கில வித்தியாசாலையில் தேசிய சேவை சனிக்கிழமை நடைபெற்றது. ஆசிரியர்கள் திரு. ஆர். நாகலிங்கம், திரு. வி. பேரம்பலம், திரு. வி. வீரசிங்கம், ஆசிரியைகள் திருமதி மரகதம் - சபாரத்தினம், செல்வி நல்லம்மா அம்பலவாணர், செல்வி ரோகிணி சின்னத்தம்பி முதலியவர்கள் இத்தேசியசேவையில் ஈடுபட்டனர் பாடசாலை அதிபர் திரு. எஸ். விஜயரத்தினமும் சமுகமளித்தார். பாடசாலைத் தூசி துடைத்தல், கட்டிடம் கழுவுதல், வெளிப்புறங்கள் உட்புறங்கள் சுத்தஞ்செய்தல் முதலான வேலைகளை மாணவர்கள் செய்தனர்.

## தி. மு. க. நல்ல எதிர்க்கட்சி அல்ல

### முதன் மந்திரி காமராஜ் கருத்து

சென்னை, பெப். 28

தமிழ் நாட்டில் சென்ற தேர்தலில் காங்கிரஸ் வெற்றிபெற்றிருந்த 151 ஸ்தானங்கள் இம்முறை 138 ஆகக் குறைந்தபோதிலும்கூட, காங்கிரஸ் பூரண பலத்துடன் இருக்கிறது என முதன் மந்திரி காமராஜ் தெரிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 50 ஸ்தானங்கள் கிடைத்திருப்பதுபற்றி அவர் குறிப்பிடுகையில், எதிர்க்கட்சியில் பல குழுக்கள் இருப்பதைவிட ஒரே எதிர்க்கட்சி இருப்பது மேல் எனக் கூறினர்.

ஆயினும் பிரிவினைகோரும் தி. மு. க. வின் வெற்றி தேசிய நலனுக்கு உகந்ததல்ல என்றும், நல்ல எதிர்க்கட்சியாக அது இருக்காது என்றும் அவர் மேலும் கூறினர்.

## அழகேசன் வெற்றி

புதுடில்லி, பெப். 28

செங்கல்பட்டில் நடைபெற்ற லோகசபைத் தேர்தலில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. ஓ. வி. அழகேசன் வெற்றிபெற்ருர்.

வாக்குகள் வருமாறு:-

ஓ வி. அழகேசன் (காங்) 1,69,988

டாக்டர் கிருஷ்ணசாமி (சுயே) 1,50,110

## கடை சொந்தக்காரர் கைக்குண்டினல் கொல்லப்பட்டார்

கொழும்பு, புதன்

ஏ. ஏ. சதார் அன் கம்பனியின் பங்குதாரரான ஹாஜி அப்துல்ரஹீம் நேற்றிரவு 10-55க்கு கைக்குண்டு ஒன்று வீசப்பட்டதன் காரணமாய் கொல்லப்பட்டார். இச்சம்பவம் 2-ம் குறுக்குத்தெருவில் நடைபெற்றதாய் அறிவிக்கப்படுகிறது. தனது கடையிலிருந்து வெளியே வந்து காரில் ஏறும்போது இச்சம்பவம் நடைபெற்றது.

## வாக்காளர் இடாப்பில் இல்லாத புதிய பெயர்கள்

### விசாரணைக்குப் பின் அங்கீகாரம்

காங்கேசன்துறை, புதன்

காங்கேசன்துறை பாராளுமன்றத் தொகுதி வாக்காளர் இடாப்பில் காணப்படாத புதிய பெயர்கள் சம்பந்தமாக இன்று வலி-வடக்கு காரியாதிகாரி அலுவலகத்தில் யாழ்ப்

(5-ம் பக்கம் பார்க்க)

# அகில இலங்கை தமிழ்மறைத் தேர்வு

## பின்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், புதன்

தமிழ்மறைக் கழகம் நடத்தும் அகில இலங்கைத் தமிழ்மறைத் தேர்வின் பாடப்பகுதிகளிலும் விதிகளிலும் சில மாற்றங்கள் செய்யுமாறு ஆசிரியர்கள் பலர் கேட்டமைக்கிணங்கப் பின்வரும் மாற்றங்களைத் தமிழ்மறைக் கழகம் செய்துள்ளது

### வயதுக் கட்டுப்பாடு

தொடக்கப்பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு என்னும் பிரிவுகளுக்கு இப்பொழுதுள்ள வயதுக் கட்டுப்பாடு நீக்கப்படுகிறது. எவரும் எந்தப்பிரிவுக்கும் ாதாற்றலாம். ஆனல் ஒவ்வொருபிரிவிலும் பரிசில்கள் இப்பொழுதுள்ள வயது எல்லைகளுக்குள் உள்ளவர்களுக்கே வழங்கப்படும்!

### பாடப்பகுதிகள்

தேர்வுக்குரிய திருக்குறள் பாடப்பகுதிகளும் பின்வருமாறு குறைக்கப்பட்டுள. தொடக்கப் பிரிவுக்கு முதல் பத்து அதிகாரம். கீழ்ப்பிரிவுக்குப் பதினென்று தொடக்கம் முப்பது முடியவுள்ள இருபது அதிகாரங்கள். மத்திய பிரிவுக்கு முப்பத்தொன்று முதல் அறுபது முடியவுள்ள முப்பது அதிகாரங்கள். மேற்பிரிவுக்குத் திருக்குறள்முழுவதும்.

இம் மாற்றங்கள்யாவும் இந்த ஆண்டு நடைபெறப்போகும் தேர்வுக்கும் உரியன. இவ்வாண்டு ஜூன் மாதத்தில் நடத்த ஒழுங்கு செய்த தேர்வைச் செப்டம்பர் மூன்ருஞ் சனிக்கிழமையன்று நடத்துவதெனவும் விண்ணப்பங்களை அனுப்பும் கடைசித் திகதி ஏப்ரல் முதலாந் திகதி எனவும் கழகம் முடிவுசெய்துள்ளது.

---

## முஸ்லிம்லீக் தலைவர் வெற்றி

புதுடில்லி, பெப். 28

இந்திய முஸ்லிம்லீக் தலைவர் திரு. முகமது இஸ்மாயில் சாஹிப் லோகசபைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவருடன் போட்டியிட்ட கம்யூனிஸ்ட் அபேட்சகரை விட் 4000 அதிகப்படியான வாக்குகள் கிடைத்தது.

---


## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணுநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாம்ப்பாணம்

## தேவை

பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் நாளாந்த தேவைகளுக்கு உகந்த பொருள்களை (ஆடை அணிகள், அழகு சாதனங்கள் விளையாட்டுப் பொருள்கள்) விற்பனை செய்யும் யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தக நிலையமொன்றைப் பொறுப்பேற்று நடத்தக்கூடிய வயது வந்த பெண் ஒருவர் தேவை. முன் அனுபவம் அவசியமல்ல. கீழ்க்காணும் விலாசத்துக்கு விண்ணபிக்கவும், c/o ஈழநாடு, தபாற் பெட்டி எண் 49, யாழ்ப்பாணம்.

## தேவை

தகுதிவாய்ந்த செல்வாக்குள்ள சொந்த ஊரிலேயே வசிப்பவர்கள் கீழ்க்கண்ட இடங்களுக்குப் பிரதிநிதிகளாகத் தேவை. பருத்தித்துறை, மீசாலை, கொடிகாமம், இணுவில், சுன்னகம், மல்லாகம், தெல்லிப்பளை, காங்கேசன்துறை. கொமிஷன் மாத்திரம் கொடுக்கப்படும்.– காரியதரிசி, அந்தியகால சகாய நிதிச் சங்கம், 330, கே.கே எஸ். வீதி, யாழ்ப்பாணம்.


# திருநெல்வேலி காந்திஜி சனசமூக நிலைய விழா

யாழ்ப்பாணம், புதன்

“இந்திய அரசாங்கம் அங்கு வாழும் ஹரிஜன மக்களின் உயர்வுக்குத் திட்டங்கள் வகுத்துச் செயலாற்றுவது போல இலங்கை அரசாங்கமும் பின் தங்கிய நிலையில் இலங்கையில் வாழும் ஹரிஜன மக்களுக்குத் திட்டமிட்டு பல கட்சிகளின் ஆதரவையும் பெற்றுச் செயலாற்ற வேண்டும். இதைவிட்டு ஹரிஜன மக்களை தமிழ் மக்கள் மத்தியிலிருந்து பிரிப்பதற்குத் திட்டமிட்டுச் செயலாற்றக்கூடாது. இந்தச் செய்கை அதிக காலம பலனைக் கொடுக்கமாட்டாது. நம்முடன் வாழும் மற்றச் சமூகத்தவர்களைத் தாக்கி அவர்களைக் காட்டிக் கொடுத்து நாம் முன்னேற எண்ணுவது அரசனை நம்பி புருஷனைக் கைவிட்ட செய்கைக்கு ஒப்பாகும். நாம் முன்னேற்றப் பாதையில் செல்லுகிறோமென்ருல் மற்றவர்களைத் திட்டி வாழுகிறது என்பதல்ல. இதற்கு தீண்டாத மக்கள் தமக்குள்ளே இருக்கின்ற வேறுபாடுகளை நீக்கி ஒன்றுபட்டுழைக்க வேண்டும். இந்த ஒற்றுமைதான் எம்மை உயர்வுக்கு அழைத்துச் செல்லும்.”

இவ்வாறு திருநெல்வேலி கிழக்கு “காந்திஜீ” சனசமூக நிலையத்தின் 10 வது ஆண்டு விழாவிற்குத் தலைமை தாங்கிய ஆசிரியர் திரு. செ. ப. ஜீவானந்தம் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

அவர் கிராம மக்களால் தேசிய சேவைத் திட்டத்தின் கீழ் தமது சொந்த முயற்சியால் கட்டி முடித்த புதிய கட்டடத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில், இந்நிலையம் கடந்த பத்து ஆண்டுகளாக இக்கிராம மக்களுக்குப் பெருஞ் சேவை செய்து வருகிறதென்றும், இந்நிலையத்திற்கு “மகாதமா காந்திஜீ”யின் பெயரை இட்டதின் மூலம் இக்கிராம மக்கள் காந்தியடிகள் ஹரிஜன மக்களுக்குச் செய்த சேவையை நினைவு கூருகின்ருர்கள் என்றும் கூறினர்.

நிலையத் தலைவர் திரு. ஆ. சின்னத்தம்பி வரவேற்புரை நிகழ்த்தினர். திருவாளர்கள் ஆ. சோமு, வ். ஐயம்பிள்ளை, குமாரசுவாமி, நாகநாதி, யோ. பிச்சன், பூ. கோபாலசிங்கம், சி. கிருஷ்ணபிள்ளை, நீ. ஆசீர்வாதம் ஆகியோரும் பேசினர்.

திரு. இ. ஐயம்பிள்ளை நன்றி கூறினர்.

---

# “எம். பி. க்களுக்கு பேச்சுச் சுதந்திரம் வேண்டும்”

—ஜே. ஆர். ஜெயவர்தன

“மக்களால் தெரிவு செய்யப்பட்ட பார்லிமெண்டரி பிரதிநிதிகளுக்கு பார்லிமெண்டினுள்ளும் வெளியேயும் மக்கள் சார்பில் பேசுவதற்கான சுதந்திரம் இருக்கவேண்டும்.”

இவ்வாறு கொழும்பு தெற்கின் முதல் எம். பீ. திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன யு. என். பி. தேசிய தொழிலாளர் சங்கக் கிளை ஒன்றை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினர்.

கண்டி, திருக்கோணமலை வீதியிலுள்ள யு. என். பி. காரியாலயத்தில் கூட்டம் நடைபெற்றது. தொடர்ந்து பேசுகையில் திரு. ஜயவர்த்தன கூறியதாவது:-

ஜனநாயகத்துக்கு மாருன விதிகளை நிறுவும் அரசாங்கத்தின் செய்கைகளைக்கண்டு யு. என். பி. ஒருபோதும் பின் தங்கிவிடமாட்டாது. பத்திரிகைகள், வானெலி ஆகியவற்றின் சுதந்திரத்தில் ஜனநாயகத்துக்கு முரணுன முறையில் அரசாங்கம் கட்டுப்பாடுகளை விதிக்கிறது. யு. என். பி. நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாத்துப்பேணி வந்துள்ளது. யு. என். பி. க்குப் பங்கம் விளைக்கும் நோக்கமாகவே சேர். ஜோன் கொத்தலாவலை, டட்லி சேனநாயக்கா ஆகியோரின் பெயர்கள் சதித்திட்டத்தினுள் வீணுக இழுக்கப்பட்டுள்ளன. எனினும் அரசாங்கத்தின் இந்த சுந்தப்பொய் அரசாங்கத்தின் முகத்திலேயே கரியைப் பூசியுள்ளது. இந்த வீண் குற்றச்சாட்டுக்களை துடைப்பதற்கு அரசாங்கம் இன்று பெரிதும்முயல்கிறது.”

# உங்கள் தினப்பலன்

சோதிடஆசான் ஜே. மதல்லியூர்

பிலவ ஆண்டு மாசிமாதம் 18-ந் திகதி வியாழக்கிழமை (1-3-62) இரவு 2-51 வரை தசமி. இரவு 7-19வரை மூலம். பின் பூராடம். சித்தயோகம், முகூர்த்ததினம். கமத்தொழில் முயற்சி. வர்த்தகம், மற்றும் கருமங்களுக்கு விசேடமாகும்.

## இன்றுபிறந்தவர்களுக்கு

இன்று பிறந்தவர்களுக்கு இவ்வாண்டில் உறவினர் ஆதரவு, சுபகருமங்கள் நடத்தல், பொருள்சேர்க்கை, பணவரவு, தேகநலம். தொழில் முயற்சி வெற்றி, இடையிடை பகை வளர்ச்சி, விபத்து, முயற்சிகளால் பணமுடை ஆதியன காணப்படுகின்றன. உத்தியோகத்தருக்கு முற்பகுதி நலந்தரும். மாணவருக்கு வித்தியாபிவிருத்திக்கு இடமுண்டு. வர்த்தகருக்கு முற்பகுதியிலும் பிற்பகுதியிலும் பலன் விசேடமாக இருக்கும். பெண்களுக்கு விவாகப் பேறுகளும் சுபகருமங்களும் நடக்க இடமுண்டு.

## நட்சத்திரப்பலன்

அச்சுவினி: பிரயாணக் கஷ்டம், அலைச்சல்.

பரணி: முயற்சி வெற்றி, சுகம்.

கார்த்திகை: தொழிற்கேடு, கஷ்டம்.

ரோகிணி: பூமிலாபம், குடும் பச்சிறப்பு.

மிருகசீரிடம்: செய்காரியத் தடை, நலக்குறைவு.

திருவாதிரை: ஊழியர் கஷ்டம், சிரமமதிகம்.

புனர்பூசம்: தொழிலூக்கம், சௌக்கியம்.

பூசம்: பிரயாணக் கஷ்டம். ஊழியர் தொல்லை.

ஆயிலியம்: பிரயாணசுகம், தொழிற்சிறப்பு.

மகம்: தொழிற்சேதம், மனக் கவலை.

பூரம்: பணவரவு, நற்செய்தி.

உத்தரம்: தொழிலுயர்ச்சி, பணவரவு.

அத்தம்: மனத்தயக்கம், நட்டபலன்.

சித்திரை: சுபசெய்தி, தொழிலுயர்ச்சி.

சுவாதி: ஊழியர் கஷ்டம், தொழிற்கேடு.

விசாகம்: தொழில்மேன்மை, சந்தோஷம்.

அனுஷம்: வீண் அபவாதம், வழக்கும் நிந்தனையும்.

கேட்டை: வித்தைவிருத்தி. மதிப்புணர்ச்சி.

மூலம்: காரியத்தடை, பணமுடை.

பூராடம்: முதியோர் ஊக்கம், தெய்வ வழிபாடு.

உத்தராடம்: நல்லோர் சந்திப்பு, முயற்சி வெற்றி.

திருவோணம்: அலைச்சல், கடன்படல்.

அவிட்டம்: தொழிற்சுகம், பணவரவு.

சதயம்: குடும்பநலக்குறைவு, சஞ்சலம்.

பூரட்டாதி: காரியசித்தி, சந்தோஷம்.

உத்தரட்டாதி: குடும்பசுகம், மனவருத்தம்.

ரேவதி: தொழிற்சித்தி, மதிப்புயர்ச்சி.

# “நீதிபரிபாலனத்தில் அரசியல் தலையீடுசரியல்ல”

— டட்லி

கொழும்பு, புதன்

“ஒரு பார்லிமெண்டில் பலமான எதிர்க்கட்சி ஒன்று இருந்து அரசாங்கத்தின் பிழையான நெறிகளைக் கட்டுப்படுத்துவது அவசியம். ஆனல் எதிர்க்கட்சி கூறும் எதையும் இந்த அரசாங்கம் உதாசீனம் செய்கிறது.”

இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா வரக்கபோலாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

“மரணதண்டனைத் திருத்த மசோதா நிறைவேற்ற மனமாகினல், அவை பார்லிமெண்டரி ஜனநாயகத்துக்கும் சுதந்திரத்துக்கும் முற்றுப்புள்ளி வைப்பதாகும். இம்மசோதாவின்பேரில் மக்கள் பல கஷ்டங்களுக்குள்ளாகவேண்டி நேரிடும்

தொழிலளாருக்குச் சாத்தியபாக இருந்த ஒரே ஒரு ஆயுதமான வேலைநிறுதத நடவடிக்கைச் சுதந்திரமும் பறிமுதல் செய்யப்பட்டுவிடும். வேலைநிறுத்த சுதந்திரத்தையும் பறிமுதல் செய்துவிட்டு மக்களை அடிமையாக்கி அரசாங்கம் வேலைவாங்கும்.”

“ஜனநாயகத்துக்கு முரணுன செய்கைகள்பற்றி எடுத்துக் கூறுவதை நான் ஒருபொழுதும் கைவிடமாட்டேன். மரண தண்டனை மசோதா போன்ற ஜனநாயகத்துக்கு முரணுன சட்டமொன்றினுலும் அரசாங்கம் எனக்குப் பாடம் கற்பிக்க முடியாது.”

குற்றவாளிகளுக்கு நீதிமன்றம் தண்டனை விதிப்பதில் அரசியல் குறுக்கீடுகள் எதுவும் இருக்கக்கூடாது. குற்றம்செய்யாதவர்களைக் குற்றவாளிகளாகவும், குற்றவாளிகளைச் சுற்றவாளிகளாகவும் காணும் அரசியல் குறுக்கீடுகள் தவிர்க்கப்படவேண்டும். சதித்திட்டம் பற்றி விசாரணை செய்வதற்கு ஒரு நீதிமன்றத்தை அமைப்பது திருடன் எங்கே என்று திருடனின் தாயாரிடம் விசாரிப்பதுபோலாகும். அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அதன் சர்வாதிகாரப் பாதையைப் பிரதிபலிக்கின்றன”

# கிராமத் தலைமைக்காரரை தாக்கினாம்; எதிரிக்கு சிறை

யாழ்ப்பாணம், புதன்

கிராம விதானையைத் தாக்கியதாகக் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட ஒரு வழக்கில் யாழ்ப்பாணம் நீதவான் திரு. அரசுவால்டன் எதிரிக்கு இரண்டு மாதக் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

பூநகரியிலுள்ள பொன்னுவளிக் கிராமத் தலைமைக்காரர் திரு. பி. சிற்றம்பலவாணரை 1961-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25-ந் திகதி பொல்லாலும், கையாலும் தாக்கிக் காயம் விளைவித்ததாக பொன்னுவளியைச் சேர்ந்த சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை மீது குற்றஞ் சாட்டி இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

காரியாதிகாரி எஸ். சிவஞானத்துடன் திரு. எஸ். வி. கதிரவேலு பிராசிக்கியூஷன் தரப்பில் ஆஜரானுர். எதிரி தரப்பில் திரு. ஏ. அமிர்தலிங்கத்தின் அனுசரணையுடன் திரு. டி. கணேசலிங்கம் ஆஜரானுர்.

52 வயதான திரு. சிற்றம்பலவாணர் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:-

1961–அக்டோபர் 25ந் திகதி மாலை 8 மணியளவில் பொன்னுவளி உதவிக் கிராமத் தலைவர் வீட்டிலிருந்து எனது வீட்டுக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தேன். நான் கையில் ஒரு லாம்பு கொண்டு சென்றேன். பிள்ளையார் கோயிலைக் கடந்து செல்லுகையில் எதிரி கோவில் பக்கமிருந்து வந்து லாம்பைப் பறித்தார் நான் லாம்பை விடவில்லை. பின்னர் எதிரி தனது வலது கன்னத்தில் இரண்டு அடி அடித்தார். நான் லாம்பைப் பிடித்திருந்த கையை விட்டேன். அதன்பின் எதிரி என்னைக் காலால் அடித்தார் நான் கீழே விழுந்தேன், கீழே விழுந்த பின்னர் எதிரி என் உடலில் பல இடங்களிலும் நாலைந்து ஐந்து தடவை பொல்லால் அடித்தார். நான் அந்த இடத்திலேயே அறிவிழந்தேன். மூர்ச்சை தெளிந்து கண்விழித்துப் பார்த்தபோது சதாசிவத்தையும், நவரத்தினத்தையும் பார்த்தேன். அவர்கள் என்னை வீட்டுக்கும், பின்னர் மருந்துச் சாலைக்கும் கூட்டிச் சென்றபின் உடையார் வீட்டுக்குக் கூட்டிச் சென்றனர். உடையாரிடம் புகார் செய்தபின், யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

இதர சாட்சிகளும் சாட்சியமளித்தபின் நீதவான் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு இரண்டு வருடக் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்தார்.

---

## குவாலியர் மகாராணி வெற்றி

புதுடில்லி, பெப். 28

மத்திய பிரதேசத்தில் குவாலியர் தொகுதியில் காங்கிரஸ அபேட்சகராகப் போட்டியிட்ட குவாலியர் மகாராணி இதுவரை வெளிவந்த தேர்தல் முடிவுகளில் எந்த அபேட்சகரும் பெற்றிராத மிகப்பெரும்பான்மையான வாக்குகளால் வெற்றி பெற்ருர்.

இவருடன் போட்டியிட்ட ஜனசங் கட்சி அபேட்சகரை விட ஒரு லட்சத்து 41, ஆயிரம் அதிகப்படியான வாக்குகளால் குவாலியர் மகாராணி வெற்றிபெற்றுள்ளார்.

# காட்டில் தீ பற்றியதால் விலங்குகள் தீக்கிரையாயின

தம்பதெனியா, புதன்

தம்பதெனியா, வடுவகட்டுக்கலைப் பகுதிக்கருகிலுள்ள காட்டில் தீப்பற்றிக்கொண்டதால் ஆயிரக்கணக்கான மிருகங்கள் தீக்கரையாகின. தீக்கிரையான மிருகங்களில் அதிகமானவை குரங்குகளே எனத் தெரியவருகிறது.

வேகமாக ஓடக்கூடிய மிருகங்கள் தப்பித்துக்கொண்டன. இவ்வாறு ஓடமுடியாத மிருகங்கள் தீக்கிரையாகின. தீப்பற்றியதால் அதிக பயிர்களும் சேதமாகியுள்ளன.

காட்டில் நிலவிவந்த வறட்சி காரணமாக இந்தத் தீ பற்றியிருக்கலாமெனத் தெரிகிறது

# தமிழ்நாடுசட்டசபைத் தேர்தல்முடிவடைந்தது

## காங்கிரஸ் 138
## தி. மு. க. 50

### 1கோடி75லட்சம் மக்கள் வாக்குரிமையை உபயோகித்தனர்

சென்னை, பெப். 28

**தமிழ்நாடு சட்டசபைக்கு நடைபெற்ற பொதுத் தேர்தல் முடிவடைந்து தேர்தல் நடைபெற்ற எல்லாத் தொகுதிகளின் முடிவும் அறிவிக்கப் பட்டுவிட்டன. 206 அங்கத்தவர்களைக் கொண்ட தமிழ்நாடு சட்டசபைக்கு 205 தொகுதிகளில் தேர்தல் நடைபெற்றது. அந்தநல்லூர் தொகுதியில் நியமனப்பத்திரம் தாக்கல் செய்திருந்த காங்கிரஸ் அபேட்சகர் திடீரென மரணமடைந்ததால் அந்தத் தொகுதியின் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது. இத் தொகுதிக்கான தேர்தலுக்கு அபேட்சகர் நியமனப்பத்திரங்கள் மார்ச்மாதம் 9-ந் திகதி தாக்கல் செய்யப்படும்.**

ஒருகோடி 86 லட்சம் வாக்காளர்களைக் கொண்ட தமிழ்நாட்டில் இத்தேர்தலில் ஒருகோடி 75 லட்சம் வாக்காளர் தங்கள் வாக்குரிமையை உபயோகித்தனர்.

தமிழ்நாடு சட்டசபையில் கட்சிநிலைவரம் வருமாறு:-

| | |
|---|---|
| காங்கிரஸ் | 138 |
| தி. மு. கழகம் | 50 |
| சுதந்திரா | 6 |
| கம்யூனிஸ்ட் | 2 |
| சோஷலிஸ்ட் | 1 |
| பார்வர்ட் பிளாக் | 3 |
| சுயேச்சை | 5 |

### வெற்றிபெருத கட்சிகள்

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் போட்டியிட்ட பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, தமிழ்தேசியக் கட்சி, சோஷலிஸ்ட் தொழிலாளர் கட்சி, ஜனசங் கட்சி, குடியரசுக்கட்சி, நாம் தமிழர் கட்சி, முஸ்லிம்லீக் ஆகியன ஒரு ஸ்தானத்தைக்கூடப் பெற்றுக்கொள்ளவில்லை.

இம்முறை நடைபெற்ற தேர்தலில் தேர்தல் நடைபெற்ற 205 ஸ்தானங்களிலும் காங்கிரஸ் கட்சி தனது அபேட்சகர்களை நிறுத்தியிருந்தது. பழைய சட்டசபையில் 154 ஸ்தானங்களைப் பெற்றிருந்த காங்கிரஸ் இம்முறை 138 ஸ்தானங்களைத்தான் பெறமுடிந்தது.

இம்முறை 142 ஸ்தானங்களுக்குப் போட்டியிட்ட திராவிட முன்னேற்றக் கழகம் 50 ஸ்தானங்களைப் பெற்றுள்ளது. தமிழ்நாடு சட்டசபையில் கணிசமான அளவு பலம் வாய்ந்த எதிர்க்கட்சி என்ற பெருமையை திராவிடமுன்னேற்றக் கழகம் பெற்றிருக்கிறது. பழைய சட்டசபையில் 15 ஸ்தானங்கள் பெற்றிருந்த திராவிட முன்னேற்றக் கழகம் இம்முறை 50 ஸ்தானங்களைப் பெற்றுள்ளது.

94 ஸ்தானங்களுக்குப் போட்டியிட்ட சுதந்திராக் கட்சி ஆறு ஸ்தானங்கள் மட்டுமே பெற்றுள்ளது. 68 ஸ்தானங்களுக்குப் போட்டியிட்ட கம்யூனிஸ்ட் கட்சி இரண்டு ஸ்தானங்களைப் பெற்றது ஆறு ஸ்தானங்களுக்குப் போட்டியிட்ட பார்வார்ட் பிளாக் 3 ஸ்தானங்களைப் பெற்றுள்ளது. சட்டசபைத் தேர்தலில் போட்டியிட்ட 220 சுயேச்சையாளர்களில் ஆறுபேர் தான் வெற்றியீட்டினர்.

சட்டசபைக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள 138 காங்கிரஸ் அபேட்சகர்களில் 58 பேர் பழைய சட்டசபையில் அங்கம் வகித்தவர்கள்.

தமிழ்நாடு சுதந்திராக் கட்சித் தலைவர் திரு. சா. கணேசன், தமிழ்நாடு கம்யூஸ்ட் கட்சித் தலைவர் திரு. எம். கலியாணசுந்தரம் ஆகியோரும் முதன் மந்திரி காமராஜர், இதர மந்திரிகள் பி. கக்கன், எம். பக்தவத்சலம், ராமையா, ஆகியோரின் வெற்றி குறிப்பிடத்தக்கதாகும் ஸ்தலஸ்தாபன மந்திரி திருமதி லூர்தம்மாள் சைமன், தி மு க சழகத்தலைவர் திரு. என். அண்ணாத்துரை, தமிழ்நாடு பிரஜாசோஷலிஸட் கட்சித் தலைவர் திரு. பி. எஸ. என். சின்னத்துரை ஆகியோர் தோல்வியடைந்தனர்.

### 13 பெண்கள் வெற்றியீட்டினர்

புதியசட்டசபைக்கு13 பெண்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் இவர்களில் 11 பெண்கள் காங்கிரஸ் அங்கத்தவர்கள். தி.மு.க கழகத்தைச் சேர்ந்த ஒருபெண் அபேட்சகரும் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஒரு பெண் அபேட்சகரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இன்று அறிவிக்கப்பட்ட சட்டசபைத் தேர்கல் முடிவுகளில் சில வருமாறு:-

### கடம்பத்தூர்

| | |
|---|---|
| ஏகாம்பரமுதலியார் (காங்) | 17,314 |
| கோவிந்தசாமி நாயுடு (சுதந்) | 10,766 |
| பி. சீனிவாசன் (சுயே) | 6,143 |
| செங்கல்வராயநாயுடு (சுயே) | 2,554 |
| கே. திருவேங்கடம (சுயே) | 2,320 |

* சுயேச்சை அங்கத்தவர்கள் மூவரும் கட்டுப்பணம் இழந்தனர்.

### சைதாப் பேட்டை

| | |
|---|---|
| முனு ஆதி (தி மு க) | 37,123 |
| கே. விநயகம் (காங்) | 23,902 |
| என். எஸ. நாயுடு (சோஷ தொ நி) | 2,888 |

திரு. நாயுடு கட்டுப்பணத்தை இழந்தார்.

### சுகாதாரசேவைபற்றி எம். பி. க்களுடன் மகாநாடு

கொழும்பு, புதன்

ஒவ்வொரு பகுதியிலுள்ள சுகாதார சுப்ரீண்டன்களும் அத்தொகுதி எம். பி. க்களுடன் வருடமொன்றுக்குநான்கு தடவை மகாநாடு நடத்துமாறு சுகாதார அமைச்சர் திரு. ஏ. பி. ஜெயசூரியா அறிவித்துள்ளார்.

இத்தீர்மானம்பற்றி சுகாதாரசேவை டைரக்டர் டாக்டர் டபிள்யூ. ஏ. கருணரத்ன சுகாதாரசேவைப்பகுதி அதிகாரிகளுக்கும் விசேஷ சுகாதார இயக்கங்களுக்கும் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட ஒருதொகுதியில் சுகாதார சேவை சம்பந்தமாக சுகாதார இலாகா எவ்வித நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்பதுபற்றியும் சுகாதாரத்துறையில் அத்தொகுதி எவ்வித விருத்திசெய்யப்பட்டுள்ளது என்பதுபற்றியும் அந்தத்தொகுதி எம். பி. க்கு தெரியப்படுத்தவே இவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார டைரக்டர் தெரிவித்துள்ளார்.

### ஜப்பானிய பிரயாணிகளின் விபத்து விசாரணை

கம்பஹா, செவ்வாய்

பசயால எனுமிடத்தில் கொழும்பு - கண்டி வீதியில் சென்ற வெள்ளிக்கிழமை இ. போ. ச. பஸ்ஸுடன் டாக்ஸி ஒன்று மோதியதால் ஏற்பட்ட விபத்தின் காரணமாக 4 ஜப்பானிய உல்லாசப் பிரயாணிகளும் டாக்ஸி சாரதியும் மரணமானது சம்பந்தமாக கம்பஹா மாஜிஸ்டிரேட் திரு. எஸ. டி. ஜெயசுந்தரா முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

நிட்டம்புவா பொலிஸ பகுதியைச் சேர்ந்த பொலிஸ சார்ஜன்ட் திரு எம் றேயல், சந்தேகநபரான இ போ ச பஸ சாரதி எஸ ஏ பீரிஸ பெரேரா என்பவரை கோர்ட்டில் ஆஜர் செய்தார்.

விபத்தில் இறந்த எஸ ஏ சைமன் பெரேரா என்பவரது டாக்ஸியை சென்ற வெள்ளிக்கிழமை காலை 4 ஜப்பானிய உல்லாசப் பிரயாணிகளும் கண்டி சென்று திரும்புவதற்காக 45 ரூபா வாடகை பேசிக் பிடித்தார்கள்

கண்டிக்கு சென்றுவிட்டு அன்று மாலை சுமார் 4-30 மணியளவில் திரும்பியபோதே இப்பரிதாப சம்பவம் நிகழ்ந்தது.

விபத்தில் சிக்கியவர்கள் வத்துபிட்டிவெல ஆஸபத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டனர் ஆனல் அவர்கள் ஆஸபத்திரியில் அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்தில் மரணமானார்கள்.

மேற்படி விபரங்கள் விசாரணையின்போது தெரியவந்தது.

இந்த விபரத்தை நேரில் பார்த்த வண. சந்திரதாச தேரோ சாட்சியமளித்தார்.

பஸ சாரதியின் கவனக் குறைவினல்தான் விபத்து நிசழ்ந்தது என்பதற்கு ஆதாரமொன்றுமில்லையென்றும் சந்தேகநபரை ரூ 1,000 பிணையில் செல்லுமாறும் அடுத்த மாதம் 10-ம் திகதி கோர்ட்டில் ஆஜராகும்படியும் மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார்.

### 'அரசாங்கம் விழமாட்டாது தொடர்ந்து சேவையாற்றும்'

— விவசாய மந்திரி

பிங்கிரியா, புதன்

"இந்த அரசாங்கம் நீடித்து நிற்காது என்றும் வங்குரோட்டடித்துவிடும் என்றும் ஒருசிலர் மனப்பால் குடித்து வருகிறார்கள். ஆனல் எந்தக் கிரகங்களோ சதித் திட்டங்களோ அரசாங்கத்தைக் கவிழ்த்து விட முடியாது என்பதை மக்களுக்கு உறுதியுடன் நான் கூற விரும்புகிறேன். நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அரசாங்கம் ஆட்சி பீடத்துக்கு உரிமையுள்ள காலம் வரை மக்களுக்குச் சேவையாற்றியே திரும்."

இவ்வாறு காணி, விவசாய அமைச்சர் திரு. சி. பி. டி' சில்வா கிம்புல்வான ஓயா புதிய அணைக்கட்டு நிறுவுவதற்கான அடிக்கல் நாட்டு வைபவத்தில் பேசுகையில் கூறினர்.

பிங்கிரியாத் தொகுதிக்கு உத்தியோகபூர்வமாகச் சென்றிருந்த காணி அமைச்சர் அணைக்கட்டுக்கு அடிக்கல் நாட்டினர். பிங்கிரியாத் தொகுதியில் நான்கு புதிய நீர்ப்பாசன திட்டங்களையும் காணி அமைச்சர் ஆரம்பித்து வைத்தார். இத் திட்டங்கள் நான்கும் சிறியவை என்றாலும் 664 ஏக்கர் நிலத்தில் பயிரிடுவதற்கு உதவியாக இருக்கும் எனத் தெரிகிறது.

கிம்புல்வான அணைக்கட்டு அடிக்கல் நாட்டு வைபவத்தில் தொடர்ந்து பேசுகையில் காணி அமைச்சர் கூறியதாவது:-

ஜனவரி 27 ம் திகதியன்று மேற்கொள்ளப்பட்ட சதித்திட்டம் வெற்றியில் முடிந்திருக்குமென்றால் பெரிதும் கஷ்டப்பட்டுப் பெறப்பட்ட ஜனநாயகத்துக்கும் மக்கள் பலருக்கும் பெரும்சேதம் ஏற்பட்டிருக்கும். சதித் திட்டம் தோல்வியில் முடிந்ததற்கு இறைவனுக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும். சதி தோல்வியுற்றதால் தான் இன்னும் நாம் ஜனநாயக ஆட்சியின் நலன்களை அனுபவித்து வருகிறோம்."

### சுழிபுரம் கிராமசபைத் தலைவருக்கு பாராட்டு

சுழிபுரம், புதன்

சுழிபுரம் கிராமசபைத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட திரு. எஸ். கந்தசாமியைப் பாராட்டுமுகமாக அண்மையில் ஒரு பாரட்டுபசாரக் கூட்டம் நடைபெற்றது.

இவர் வெற்றிபெற்றதும் வடக்கம்பரை அம்மன் கோயிலில் விசேட பூசைகள் நடைபெற்றது. இதைத்தொடர்ந்து அவர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப் பட்டார்.

சுழிபுரம் இந்துசமய விருத்தித் சங்கத்தலைவர் திரு சண்முகத்தின் சர்பா பேசுகையில், தலைவரின் தன்னலமற்ற பொதுசேவை மூன்றும்முறையும அங்கத்தவரிடையே அத்தகைய ஒற்றுமையை ஏற்படுதியதெனவும் அவர் பதவி வகிக்கும் பலஸ்தாபனங்களும் அவர் சேவைக்காக வலியவந்தனைகின்றவேயன்றி அவர் தேடி ஓடுவதில்லையெனவும் ஏழைமக்களுக்கும் நடுத்தர வகுப்பினர்க்கும் அவர் செய்யும் உதவிகள், அவர்களை அவர் கண்ணியப்படுத்தி நடாத்துதல் ஆகிய வற்றின் பலனே அவரிங்நிலை பெற்றமை எனவும், நல்ல திறமையான உதவித்தலைவரினதும் பரந்த நோக்கும் சேவைமனப்பான்மையுள்ள புதிய இளம் அங்கத்தர்களது ஒத்துழைபபும் கொண்டு இக்கிராமசபை சிறந்து விளங்குமெனவும் குறிப்பிட்டார்.

தலைமை ஆசிரியர் திரு. சி. மயில்வாகனம் பேசுகையில், மக்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டங்களும் வையாமல் இரவே பகலென்றும் பாராது, உதவும் வரை இத்தலைவர் பதவிஅவரைவிட்டு நீங்காது. தொடந்திருக்குமென்று கூறினர்

தலைவரவர்கள் தம்சார்பிலும் உபதலைவர் சார்பிலும் நன்றி கூறி அங்கத்தவர் ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்தார்.

### மைசூரில் 6 மந்திரிகள் 3உதவிமந்திரிகள்'தோல்வி

பங்களூர், பெப். 28

மைசூர் ராஜ்ய சட்டசபைக்கு நடைபெற்ற தேர்தலில் மைசூர் ராஜ்ய மந்திரிகள் ஆறுபேரும் உதவிமந்திரிகள் மூன்று பேரும் தோல்வியடைந்தனர்.

மைசூர் பிரதேச காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. நிஜலிங்கப்பாவும் தோல்வியடைந்தார். இவருடன் போட்டியிட்ட பிரஜா சோஷலிஸ்ட் கட்சி அபேட்சகர் திரு. நஞ்சப்பா வெற்றிபெற்றார்.

லோகசபை ஸ்தானத்துக்குப் போட்டியிட்ட இந்து மகாசபைத் தலைவர் திரு. தேஷ்பாண்டேயை அவருடன் போட்டியிட்ட ஒரு சுயேச்சை அபேட்சகர் தோற்கடித்தார்.

### 'ஆசிரிய கலாசாலை பெறு பேறுகள்'

ஓமந்தை, புதன்

வவனியா மாவட்டத்தில் 1961-ம் ஆண்டு நடைபெற்ற ஆசிரிய கலாசாலைப்பரீட்சைக்குத் தோன்றியவர்களின் பெறுபேறுகள் 27-ந்திகதி வெளிவந்துள்ளன.

சித்தியடைந்தோருக்கு பங்குனி மாதம் 7-ந்திகதி யாழ்ப்பாண வித்தியா கந்தோரில் நேர் முகப்பரீட்சைக்குத்தோன்றுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களே இம்முறையும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

### மந்திரி கேஸ்கர் தோல்வி

புதுடில்லி, பெப். 28

லோகசபை ஸ்தானத்துக்கு உத்தர பிரதேசத்தில் ஒரு தொகுதியில் போட்டியிட்ட மத்திய தகவல் ஒலிபரப்பு மந்திரி டாக்டர் பி. வி. கேஸ்கர் தோல்வியடைந்தார். இவரை சுயேச்சை அபேட்சகர் ஒருவர் சுமார் 29,000 அதிகப்படியான வாக்குகளால் தோற்கடித்தார்.

மத்திய அரசாங்க வர்த்தக மந்திரி திரு. பீ. கோபால் ரெட்டி, மணுபாய்ஷா ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

### தேபர் வெற்றி

புதுடில்லி, பெப். 28

ராஜ்காட் தொகுதியிலிருந்து லோகசபை ஸதானத்துக்குப் போட்டியிட்ட காங்கிரஸின் முன்னள் அக்ராசனர் திரு. யு. என். தேபர் வெற்றியீட்டினர். இவருடன் போட்டியிட்ட சுயேச்சை அபேட்சகரை திரு. தேபர் 41,000 அதிகப்படியான வாக்குகளால் தோற்கடித்தார்.

## மணி வாக்கு

'ஏழையாய் இருப்பது அவமானமாகாது. அதனை அவமானம என்று நினைப்பதுதான் அவமானமாகும்.

ஈழநாடு
EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389

யாழ்ப்பாணம பிலவ ஆண்டு மாசி மீ 18 உ ( 1- 3 - 62)

## இந்தியத் தேர்தல் முடிவுகள்

இதுவரை கிடைத்துவரும் இந்திய பொதுத் தேர்தல் முடிவுகளைப் பார்க்கையில், தலைமை அரசாங்கத்திலும் ராஜ்ய அரசாங்கங்களிலும் நிர்வாகப் பொறுப்பை, காங்கிரஸிடமே இந்திய மகாஜனங்கள் மீண்டும் ஒப்புவிப்பதாகத் தெரிகிறது. இதற்கு முக்கிய காரணம் நேருஜியின் செல்வாக்குத்தான் என்றால் அதிக தவறாகாது.

நாடு விடுதலை அடைந்தபின் 14 ஆண்டுகளாக காங்கிரஸ் ஆட்சி நாடெங்கும் நடந்து வந்துள்ளது. இந்த ஆட்சியில் பல பல குறைகளுண்டு. ராஜாஜி இவற்றை இந்தத் தள்ளாத வயதிலே நாடெங்கும் பறந்து சென்று பிரசாரம் செய்திருக்கிறார். பல எதிர்க்கட்சிகளும் பொதுக் கூட்டங்களிலும், பத்திரிகைகள் துண்டுப் பிரசுரங்களிலும் இவற்றை வெளிப்படுத்தி தாக்கி இருக்கின்றார்கள். ஏழ்மை, வேலையில்லாக்கஷ்டம், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, எல்லாவற்றையும் மக்களில் பலர் அனுபவித்தும் வருகின்றார்கள். நிர்வாக ஊழல்கள் பல உண்டு. அப்படியிருந்தும் காங்கிரஸிடமே மீண்டும் ஆட்சிப் பொறுப்பை இந்திய மக்கள் ஒப்புவித்திருப்பதற்கு முக்கிய காரணம் இருக்கத்தான் வேண்டும்.

நாட்டுக்கு அரசியல் விடுதலை பெற்றுத் தந்த காங்கிரஸ் ஸ்தாபனம் இந்தியாவெங்கும் கட்டுப்பாடாக இயங்கி வருவதுபோல், எதிர்க்கட்சிகள் எதுவும் இருக்கவில்லை. எதிர்க்கட்சிகளிடையே கொள்கைஒற்றுமையும் இல்லை. ஸ்திரமான அரசாங்கத்தை, தலைமையிலோ பல ராஜ்யங்களிலோ, காங்கிரஸைவிட வேறு கட்சிகள் அமைக்க முடியுமென்ற நம்பிக்கையும் மக்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. ஸ்திரமான ஆட்சி வேண்டுமென்ற கவலையிலும் ஆவலிலுமே காங்கிரஸை மக்களில் பெரும்பாலோர் ஆதரித்திருக்க வேண்டும். அண்டை நாடுகளிலே ஸ்திரமான அரசாங்கமின்றி, நாடு முன்னேற்றமடைய முடியாமல் தவிப்பது அவர்களுக்குத் தெரிந்த விஷயமே.

காரணம் எதுவாயினும்சரி, மீண்டும் நிர்வாகப்பொறுப்பை ஏற்கும் காங்கிரஸ், இனி அதிக கவனமாக இருந்து மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும். எதிர்க்கட்சிகளின் பலம் குறைவாக இருக்கலாம். தங்களுக்கு அசைக்க முடியாத மெஜாரிட்டி பலம் கிடைத்துவிட்டதென்று காங்கிரஸுக்கு திமிர் பிடித்துவிடக்கூடாது. தொடர்ந்து பல்லாண்டுகளாக ஆட்சிப் பொறுப்பு அக்கட்சியின் கையிலேயே இருப்பதால், பல பெருச்சாளிகள் சுரண்டல்களைத் தொடர்ந்து நடத்த முயலலாம். ஆகவே எதிர்க்கட்சிகள். கண்ணில் திரிபோட்டுக் கொண்டு பொது நன்மையைக கண்காணித்து ஊழல்களை சட்டசபைகள் மூலம் அம்பலப்படுத்த வேண்டும். எதிர்க்கட்சி பலம் குறைவாக இருப்பினும், காங்கிரஸ், அவர்கள் கூறும் குறைகளைக் கேட்டு, அவற்றை நீக்க எப்போதும் தயாராக இருக்க வேண்டும். இவ்வித பரஸ்பர ஒத்துழைப்பில்தான் ஜனநாயகம் தழைத்தோங்கி பொது மக்களின் நன்மையையும் பாதுகாக்கப்பட முடியும்.

# கடல்நீரை நன்னீராக்குதல் உலக நாடுகளுக்கு நன்மை

மனிதர்களின் நல்வாழ்வுக்கு முக்கியமான தேவை குடிப்பதற்கு நல்ல தண்ணீராகும். நல்ல தண்ணீர் கிடைக்காத இடங்களில் கடல் நீரைக் கொண்டு எப்படிக்குடிநீர்தயாரிப்பது என்பதற்கான வழிகள் இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இத்தகைய பரீட்சைகள் காரணமாக உலக நாடுகள் பல நன்மையடையவிருக்கின்றன.

இரண்டாவது உலக யுத்தம் முடிந்த பின்பு மேற்கு ஜெர்மனியில் எல்லாக் கிராமப் பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்வதற்காக ஒரு மத்திய திட்டம் தயாரிக்கப்பட்டது. தண்ணீர் பற்றாக்குறையை திருப்திகரமாக சமாளிக்க பல முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. இத்தகவலை ஷெல்ஸ்விக் ஹோல்ஸ்டீன் தண்ணீர் விநியோக இலாகா வெளியிட்டுள்ளது.

ஷ்லெஸ்விக் ஹோல்ஸ்டீனுக்கப்பால் கடலில் ஹாலிஜென் தீவுகள் என்ற தீவு இருக்கின்றது. இதில் சதுப்பு நிலங்கள் அதிகம். பூமிக்கடியிலிருந்து கிடைக்கும நீரும் உவர்ப்பு கொண்டது. இதை மனிதர்கள் மிருகங்கள் குடிப்பதற்கு உபயோகிக்க முடியாது. இத்தீவுக்கு குடிதண்ணீர் விநியோகத்திற்கு பிரதான நிலப் பரப்பிலிருந்து குழாய்கள் அமைக்க வேண்டியிருக்கிறது.

ஹாலிஜென் தீவுகளிலுள்ளவர்கள் நல்ல குடிதண்ணீருக்கு மழையையே நம்ப வேண்டியிருக்கிறது. இந்த நீரையும் சுத்தமானது என்று சொல்லுவதற்கில்லை. அத்துடன் மழையும் அடிக்கடி பெய்வதில்லை.

ஹாலிஜென் தீவுகளில் முக்கிய பகுதியான பெல்வொரீம் என்ற இடத்திற்கு முதலில் தண்ணீர் விநியோகத்துக்கு குழாய்கள் அமைக்கப்படவிருக்கின்றன. இக்குழாய்கள் ஒருவித உறுதியான பிளாஸ்டிக்கினால் செய்யப்பட்டிருக்கும். இந்த ஏற்பாடு ஒருபுறமிருக்க கடல் நீரிலிருந்து எப்படி குடிநீர் தயாரிப்பது என்பதுபற்றிய ஆராய்ச்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### பாலைவனத்திலும்

சில நாடுகள் இந்த ஆராய்ச்சிகளை நடத்திப் பல முறைகளைக் கண்டுபிடித்துள்ளன. யுனைடெட் ஸ்டேட்ஸ் (அமெரிக்கா)வில் கடல் நீரிலிருந்து குடிநீர் தயாரிப்பது வெற்றிகரமாகக் கையாளப்பட்டு பாலைவனப் பகுதிகளில், தண்ணீர் பஞ்சப்பகுதிகள் இவைகளின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஆபிரிக்காவிலுள்ள சஹாரா பாலைவனத்திலும் இம்முறை பயனளித்துள்ளது. "எலெக்ரோ-டயாலிஸிஸ்" முறை மூலம் கடல்நீரிலுள்ள உப்பு அகற்றப்பட்டு நல்லகுடிநீர் தயாரிக்கப்படுகிறது. உறைக்கச் செய்து உப்பை வெளிப்படுத்துவது மற்றொரு முறையாகும்.

இத்துறையில் தொழில் நுணுக்கப் பிரச்சினைகள் எல்லாமே அநேகமாகத் தீர்க்கப்பட்டுவிட்டன. என்றாலும்கடல் நீரிலிருந்து குடிநீர் தயாரிப்பதற்கு வேண்டிய இயந்திர சாதனங்கள் ஏராளப்பொருள் செலவில் அமைக்க வேண்டியிருக்கிறது. இந்தக் கருவிகளை உபயோகிக்க அவ்வப்போது ஆகும் செலவும் மிக அதிகமாக இருக்கிறது. ஹாலிஜன் தீவில் வசிப்பவர்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் செய்தாக வேண்டியது முக்கியமென்றாலும் இவ்வளவு செலவில் இத திட்டத்தை மேற்கொள்வது என்பது சாத்தியமற்றது.

பொருளாதாரத் துறையில் சிலாக்கியமான ஒரு நீண்டகால ஏற்பாட்டிற்கு வழி செய்தாக வேண்டும் என்று திரு. சூர் கூறுகிறார்.

பெல்வொர்ம் என்ற இடத்தில் கடல் நீரிலிருந்து குடிதண்ணீர் தயாரிக்கும் பரீட்சார்த்த இயந்திர சாதனம் அமைக்கப்படும்.

ஜெர்மன் விஞ்ஞானிகள் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்கவிடாது முயற்சி செய்தே வருகின்றனர். இதில் வெற்றி பெறுவதால் தங்கள் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதுடன் உலக நாடுகளுக்கும் நன்மை செய்தவர்களாக அவர்கள் ஆவார்கள்.

# குண்டுகள் வெடிக்காது காப்பாற்றிய வீரர்

இரண்டாவது மகாயுத்தத்தில் குண்டுகள் வீசப்பட்டபோது சில கீழே விழுந்தும் வெடிக்காமலிருந்தன. வால்டர் மெர்ஸ் என்பவர் தன் உயிருக்கு ஏற்படக்கூடிய ஆபத்தையும் பொருட்படுத்தாமல் இந்த வெடிகுண்டுகளை அணுகி அவைகளை வெடிக்காதபடி செய்து பிறருடைய உயிர்களைக் காப்பாற்றியவர். இவரைக் ஹாம்பர்க் வாசிகள் அவ்வளவுபேருக்கும் நன்றாகத் தெரியும் இவர் சேவையை எல்லாரும்பாராட்டியுள்ளனர். இவர் 4,800 தடவை இம்மாதிரி ஆபத்துக்களில் ஈடுபட்டு வெற்றி கண்டிருக்கிறார். இவர் இப்போது தன் வேலையிலிருந்து ஓய்வுபெற்றிருக்கிறார் இவரை ஹாம்பர்க மேயர் சமீபத்தில் விருந்து அளித்துக் கௌரவித்திருக்கிறார்.

வால்டர் மெர்ஸ் ஒரு என்ஜினியராக வாழ்க்கையை ஆரம்பித்தவர். மகாயுத்தத்தின் போது வெடிகுண்டுகளை ஆபத்தில்லாமல் செய்யும் வழியை இவர் கற்றறிந்தார், யுத்தம் முடிந்த பின்பு நாம் குண்டுகளையும் வெடிமருந்துகளையும் கையினால்கூடத் தொடக்கூடாது என்று இவர் அடிக்கடிசொல்லி வந்தார்

வெடிக்காத குண்டுகள் பின்னர் திடீரென வெடித்ததால் ஹாம்பர்க்கில் சுமார் 40 குழந்தைகள் மாண்டனர். இம்மாதிரி ஆபத்து விளைவிக்கக் கூடிய வெடி குண்டுகள் பல இருப்பது தெரிய வந்ததின் பேரில் வால்டர் மெர்ஸ் இப்பணியை மேற்கொள்ளத் தானாகவே வலிய வந்தார். லாரி லாரியாக வெடிக்காத குண்டுகளை சேகரித்து அப்புறப்படுத்தினார் இவர். இவரும் இவருடைய சகாக்களும் ஒரு தினத்திற்கு 16 மணிநேரம்வேலைசெய்தனர். 1945-க்குள் வேலை முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் முடியவில்லை. இப்போதுதான் வால்டர் மெர்ஸ் ஓய்வெடுக்க முடிந்தது.

ஒவ்வொரு வெடிக்காத குண்டுகளிலும் இருந்து வெடிக்கும்படியான "பயூஸ்"கள் உள்பக்கமாக வெளியில் தெரியாதபடி வைக்கப்பட்டிருக்கும். இதைக கண்டுபிடித்து அகற்றுவதென்பது பேராபத்தான வேலை. இம்மாதிரிப்பணியில் ஈடுபட்ட அநேகர் உயிரிழந்திருக்கின்றனர். மெர்ஸ்தான் அதிர்ஷ்டசாலி என்றும் அதனால்தான் உயிர்தப்பியிருப்பதாகவும்கூறுகிறார்.

## ஸ்கூட்டரில் உலகம் சுற்றுகிறார்கள்

கொழும்பு, புதன்

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கெயித்லாயிட் (23) டெறிசோஸ் (21) ஆகிய இரு வாலிபர்களும் தமது பதவிகளைத் துறந்துவிட்டு உலகம் சுற்றப்புறப்பட்டுள்ளார்கள்.

'இவ்வித சுற்றுப்பிரயாணங்களை இளமையிலேயே மேற்கொள்வது நல்லது. இதனால் கல்வி அறிவும் வளருகிறதல்லவா' என்கிறார் கொழும்பு வந்து சேர்ந்துள்ள இரு உலகம் சுற்றும் பிரயாணிகளுள் ஒருவரான லாயிட்.

இந்த இரு பிரயாணிகளும் கொழும்பிலிருந்து, பிரிட்டன் இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈரான் முதலிய நாடுகளுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் செல்வார்கள்.

இன்னும் 6 மாதங்களில் தமது உலக சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொள்ளலாமென இவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளார்கள்.

## ரூபா நாற்பத்திஏழரை கோடி

### இந்தியாவுக்கு அமெரிக்காகொடுக்கும்

புதுடில்லி பெப். 28

இந்தியாவுக்கு நாற்பத்தி ஏழரை கோடி ரூபாய் கடன் வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது இவ்வளவு பெருந் தொகையாக முன்னர் ஒருபோதும் வெளி நாடு ஒன்று ஒரே தடவையில் கடன் வழங்கியதில்லை.

## துறைமுகப்பகுதிக்கு சுகாதார அதிகாரி

கொழும்பு, புதன்

கொழும்புத் துறைமுகப்பகுதிக்கான சுகாதார சேவைகளைக் கவனிப்பதற்கு ஒரு தனிப்பட்ட அதிகாரியை நியமிக்கும்படி சுகாதார சேவைப் பகுதி டைரக்டர் டாக்டர் டபிள்யு ஏ. கருணாரத்ன அரசாங்கத்திடம் கேட்டுள்ளார்.

கொழும்பு துறைமுகப்பகுதி சுகாதாரவேலைகளை துறைமுகக் கார்ப்பரேஷனின் தலைவரும், சுங்க அதிகாரியும், துறைமுகக் கமிஷனும், சுகாதார இலாகாவும் கண்காணித்து வருவதாகவும், ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் பொறுப்பில் துறைமுகப்பகுதி சுகாதார சேவைகள் இருப்பதால் சரிவர வேலைகள் நடப்பதில்லை எனவும் அரசாங்கத்துக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில் டாக்டர் கருணாரத்ன கூறியுள்ளார்.

துறைமுகம் ஒரு நெருக்கடியான பகுதியென்றும், சுமார் 18,000 பேர்களுக்கு அங்கு சுகாதார சேவை வசதிகள் வழங்கப்படவேண்டும் எனவும், எனவே சுகாதாரசேவையில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என, டாக்டர் கருணாரத்ன தமது மகஜரில் வலியுறுத்தியுள்ளார்.

## ஐயாறன் எழுதுவது

இந்தியாவிலே இந்தத் தேர்தல் உற்சவத்துக்குப் பொறுப்பேற்று இதை வெற்றிகரமாக நடத்தி வருபவர் யார் தெரியுமா? ஒரு தமிழர்தான். பிரதம தேர்தல் கமிஷனரான வைத்தியநாத கல்யாணசுந்தரத்துக்கு 58 வயதாகிறது. அவர் தஞ்சாவூரைச் சேர்ந்த கூத்தூரில் பிறந்தவர். கேம்பிரிட்ஜ் எம். ஏ. 1927-ம் வருடத்தில் ஐ. ஸி. எஸ். பரீட்சையில் தேறி இந்திய சிவில் சர்வீஸில் சேர்ந்தார். 10 வருடகாலம் சட்ட அமைச்சு காரியாலயத்தில் இருந்துவிட்டு, 1958-ம் வருஷத்தில், தேர்தல் கமிஷன் காரியாலயத்தில் சேர்ந்தார். உதவி கமிஷனர், ஜில்லா ஜட்ஜ், நாகபுரி ஹைகோர்ட் ரிஜிஸ்திரார் முதலிய பதவிகளை வகித்தார்.

உலகிலே பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் இத்தேர்தலை அமைதியாக, வெற்றிகரமாக நடத்தி வைத்தவர் ஒரு தமிழரே என்பதை நினைக்கையில், என்னையும் அறியாமல் பெருமையாக இருக்கிறது.

* * *

மல்லாகம், கந்தரோடை, சுன்னாகம் முதலிய பள்ளிக்கூடங்களுக்கு இதுவரை கூட்டுறவு ஸ்தாபனமொன்றே இடைவேளை பணிஸ்களை 'சப்ளை' செய்து வந்ததாம். அந்த ஏற்பாட்டை மாற்றி இன்றுமுதல் ஒரு தனிப்பட்ட பாண் தயாரிப்பாளரிடமே கொடுக்க வேண்டுமென்று உத்தரவு கிடைத்துள்ளதாகத் தெரிகிறது.

கூட்டுறவு ஸ்தாபனங்களை வளர்த்து ஆதரிக்க வேண்டுமென்று கூறப்படும் இக்காலத்தில் ஏன் கூட்டுறவு ஸ்தாபனத்திடமிருந்து இதைப் பறிக்க வேண்டும்.

சப்ளை செய்யும் பாண் சரிவரஇல்லையா? அல்லது இதற்கு வேறு என்ன காரணம்? இதைப்பற்றி பார்லிமெண்டில் கேள்வி கேட்டு, உண்மையை பொதுமக்களுக்கு விளக்க வேண்டும்.

* * *

இந்தியாவிலே இனி ஒவ்வொரு வருடமும். அவ்வருட "விளையாட்டு வீரரை"த் தெரிவுசெய்து, அவருக்கு "அர்ஜுனன்" என்ற பட்டத்தை அளித்து கௌரவிக்க இந்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக, டில்லியிலிருந்து "ஈழநாடு" நிருபர் தெரிவிக்கின்றார்.

மகாபாரதத்திலே வில்விஜயனான அர்ஜுனன் பல வித்தைகளிலும் சிறந்தவர். அவர் பெயரால் இந்தக்கௌரவம் அளிக்கப்படுகின்றது இவ்வாண்டிலே மார்ச் மாதம் 14-ந் திகதி ராஜ்டிரபதி பவனில் இந்தக்கௌரவம் விசேஷ வைபவத்தில் அளிக்கப்படுமென்று தெரிகிறது. நம் இலங்கையிலும் இவ்விதம் அளிக்கப்படுவது, இங்கு விளையாட்டுகளில் பலருக்கு உற்சாக மூட்ட வழிசெய்யும்.

* * *

இந்தியாவிலே ரஷ்ய பழமரங்கள் பல பயிராக்கப்பட இருக்கின்றன. ரஷ்ய திராட்சை, மாதுளை, அத்திப்பழம், ஆப்பிள் முதலிய 41 வகைப் பழமரங்கள் இந்தியாவில் பயிராக்கப்படுமென்றும், ரஷ்ய விவசாய இலாகா இதற்கான உதவிகளைச் செய்துள்ளதாயும் இந்தியாவில் பழ உற்பத்தியைப் பெருக்க இது உதவியாக இருக்கலாமென்றும் சொல்லப்படுகிறது.

## தேசியவாதிகள் அங்கீகாரம்!

டிரிபோலி, பெப். 28

அல்ஜீரிய போர் நிறுத்த ஒப்பந்தத்தை டிரிபோலியில் நடைபெற்ற அல்ஜீரிய தேசிய வாதிகள் பார்லிமெண்ட் அங்கீகரித்துவிட்டதாய் அறிவிக்கப்பட்டது.

# ஏழு பேருக்குத் தூக்குத் தண்டனை

## ஜூரிகள் மூன்று முறை ஆலோசனைக்கு ஓய்வெடுத்தனர்

### இரவு 7-30 மணிக்கு அசைஸ் கமிஷனர் ஸ்ரீஸ்கந்தராஜா தீர்ப்பு வழங்கினர்

கொழும்பு, புதன்

**கொழும்பு அசைஸ் நீதிமன்றத்தில் அசைஸ் கமிஷனர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராஜா ஏழு பேருக்குத் தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.**

**இந்த வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 7-30 மணிக்குத்தான் முடிவுற்றது.**

இந்த எழுவரும் சட்ட விரோதமாகக் கூடியதாகவும், கொலை செய்ததாகவும், துயரமுண்டாக்குமளவுக்கு காயமேற்படுத்தியதாகவும் ஆகிய குற்றச்சாட்டுகளுக்கு ஏகமனதாகக் குற்றவாளிகளெனக் காணப்பட்டனர்.

எச் எக்மன், ஜி. பியதாசா, எச். குணவர்த்தன, ஜி. சைமன், டி. டானியல், எச். ஆபிரகாம் என்னும் ஜீண்டி, எச். கரோலிஸ் ஆகிய எழுவருமே தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களாவர்.

இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட இன்னொரு எதிரியான ஓ. டான்டிரிஸ் சிங்கோ குற்றவாளியல்ல என்ற ஏகமனதான முடிவுக்கமைய விடுதலை செய்யப்பட்டார்.

ஜூரர்கள் ஆழ்ந்து ஆராய்ந்து தமது முடிவைத் தெரிவிப்பதற்காக மூன்று முறை ஓய்வெடுத்துக்கொண்டனர்.

இந்த வழக்கில் எட்டு எதிரிகள் மீது ஒன்பது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன. கடந்த நவம்பர் மாதம் 17-ந் திகதி ஹொரணையிலுள்ள குடுஉடுவா என்ற இடத்தில் சட்ட விரோதமாகக் கூடியதாகவும், எச். வியோரிஸ் சிங்கோ என்பவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் துன்பமுண்டாக்கும் வகையில் காயமேற்படுத்தும் ஒரே நோக்குடன் குற்றம் புரிந்ததாகவும், வியோரிஸ் சிங்கோவின் மகளான எச். லீலாவதியைக் கொலை செய்ததாகவும் வியோரிஸ் சிங்கோவுக்கும் அவரது மனைவி மாபி நோனா, இன்னொரு மகள் எச். சோமாவதி ஆகியோருக்கு படுகாயம் உண்டுபண்ணியதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

தமது முடிவைத் தெரிவிப்பதற்காக ஜூரர்கள்முதலில் மாலை 3 மணிக்கு ஓய்வெடுத்தனர். இவர்கள் இரண்டரை மணித்தியாலங்களின் பின் திரும்பினர்.

கொலைக் குற்றத்தைத் தவிர்ந்த ஏனைய குற்றச்சாட்டுகளுக்கு டான்டிரிஸ் சிங்கோ நீங்கலாக ஏனைய எழுவரும் குற்றவாளிகள் என அசைஸ் விகிதருடைய ,கேள்விக்கு ஜூரர்கள் தலைவரான திரு. ஒலிவர் வன்னியாச்சி பதிலளித்தார்.

இந்த முதல் முறையில் டான்டிரிஸ் சிங்கோவைத் தவிர்ந்த ஏனையோர் சிறுகாயம் உண்டு பண்ணியதற்கு குற்றவாளிகள் என ஜூரர்கள் ஏகமனதாகத் தெரிவித்தனர்.

டான்டிரிஸ் சிங்கோ குற்றவாளியல்ல என்றும் ஏகமனதாகத் தெரிவித்தனர்.

கொலைக் குற்றம் சம்பந்தமாக ஜூரர்களின் முடிவைத் தம்மால் ஏற்றுக்கொள்வதில் கஷ்டமாகவிருக்கிறதென நீதிபதி தெரிவித்தார்.

"இந்த முடிவை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிறது. ஆகையால் இதனைப் புனராலோசனை செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று நீதிபதி கூறினர்.

"சட்ட விரோதமாகக் கூடியிருப்பார்களேயானல், சீலாவதிக்கு காயம் உண்டு பண்ணவும், கொலை செய்யவும் எண்ணியிருப்பார்களேயன்றி சிறு காயமேற்படுத்த என்று சொல்லமுடியாது. படுகாயந்தான் மூளைக்கு சேதமேற்படுத்தியது ஆகையால் இந்த முடிவை ஏற்றுக்கொள்ள இயலாது" என நீதிபதி மேலும் தெரிவித்தார்.

இங்கிலையில் ஜூரர்கள் இரண்டாவது முறையாக ஆராய்ந்து முடிவுசெய்வதற்காக மாலை 5-35 மணிக்கு ஓய்வெடுத்து மாலை 6-20 மணிக்குத் திரும்பிய கொலைக்குற்றம் சம்பந்தமாக தங்களுக்குமேலும் விளக்கிக் கூறுமாறு நீதிபதியைக் கேட்டனர்.

ஜூரர்களுக்கு மேலும் விளக்கிக்கூறுகையில் நீதிபதி தெரிவித்ததாவது:

முடிக்குரிய சாட்சியங்களான வியோரிஸ சிங்கோ, மாபி நோனா, சோமாவதி ஆகியோரது சாட்சியங்கள் மூலம் சீலாவதிக்கு அடித்ததென்பதையும். அது சம்பந்தமான வைத்திய சாட்சியத்தை ஏற்றுக்கொண்டால் சாதாரண ரீதியில் அது மரணத்தை ஏற்படுத்தியிருக்குமென்பதற்கு போதுமானதாகும். ஆகையினல் எதிரிகளின் நோக்கம்கொலைசெய்வதுதான் என்பதை அறிந்து கொள்ளலாம்

இந்தச் சாட்சியங்களை ஏற்றுக்கொண்டு சட்ட விரோதமாக கூடியதையும் வைத்துக்கொண்டு பார்த்தால் கொலைக் குற்றம் செய்யப்பட்டதென்று முடிவைக் கட்டுவதில் கஷ்டமிராது.

சிறு காயமேற்படுத்தியதென்ற உங்கள் முடிவு விளங்க முடியாததாக இருக்கிறது. தண்டனை வழங்குவது உங்களைப் பொறுத்ததாகவோ என்னைப் பொறுத்ததாகவோ இல்லை. சட்டம்தான் இடமளிக்கவேண்டும்."

மீண்டும் ஜூரர்கள் மூன்றும் முறையாக ஆராய்ந்து முடிவு செய்வதற்காக இரவு 6-35 மணிக்கு ஓய்வெடுத்து இரவு 7-01 மணிக்குத் திரும்பினர். 26 நிமிஷம் தாமதமாக வந்த இவர்கள் டான்டிரிஸ் சிங்கோவைத் தவிர ஏனைய எழுவரையும் கொலைக் குற்றவாளிகள் என ஏகமனதாகக் கண்டிருப்பதாகத் தெரிவித்தனர். டான்டிரிஸ் சிங்கோவை நீதியரசர் விடுதலை செய்தார். குற்றவாளிகளாகக் காணப்பட்ட ஏனைய ஏழுபேருக்கும்,ஆளுக்கு ஏழரை வருட கடும் ஊழியமும் மரண தண்டனையும் விதித்தார்.

தீர்ப்புக்கள் யாவும் அளிக்கப்பட்ட பின்னர் நீதியரசர், வழக்கறிஞர் திரு. பி பி. தம்பு நடந்துகொண்ட முறை பற்றிக் குறிப்பிட்டார்.

'திரு. தம்பு கையாண்ட நாடக முறை பிறைஸ் பார்க்' போன்ற ஒரு இடத்துக்கு அன்றி நீதி மன்ற முன்னிலைக்கு ஏற்றதல்ல. புராசிக்கியூஷன் சாட்சிகளை மடக்கும் நோக்கத்துடன் திரு. தம்பு நடந்துள்ளார். பார் குமாரகுலசிங்கம் ஜூரி முன்னிலையில் பேசிய போது திரு. தம்பு நீதிமன்றத்தில் நித்திரை செய்துகொண்டிருந்தார். என்று நீதியரசர் சுட்டிக் காட்டியபோது திரு தம்பு இதை மறுத்துவிட்டார்

நீதித் தொழிலின் தரம் இவ்வாறு கெட்டுப் போய்விடக் கூடாது என நீதியரசர் அனுதாபம் தெரிவித்தார்.

---

## கடலில் புதிய பாலம் அமைக்கும் யோசனை

### காங்கேசன்துறை பட்டினசபைக் கூட்டம்

காங்கேசன்துறை, புதன்

காங்கேசன்துறை பட்டின சபையின் விசேட கூட்டமொன்று இன்று பிற்பகல் தலைவர் திரு. அ. இராசரத்தினம் தலைமையின் கீழ் நடைபெற்றது. தலைவர் உட்பட இரு அங்கத்தவர்கள் மட்டும் கூட்டத்திற்கு சமுகமளித்தனர்.

சிமெந்துத் தொழிற்சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், முதலாவதாக சிமெந்துத் தொழிற்சாலை வடக்கு வாசல் வீதி-பருத்தித்துறை வீதிச் சந்தியிலிருந்து அரசாங்க வைத்திய சாலைக்கூடாகக் கடற்கரை வரையும் ஓர் பாலம் கடலில் அமைக்க உத்தேசித்திருப்பதாகவும், மேற்படி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இரண்டாம் வட்டாரத்திலுள்ள ஐயனர் கோவில் சுடுகாட்டை அரசாங்கம் எடுக்க எண்ணியிருப்பதால் அச்சுடுகாட்டை அரசாங்கம் எடுப்பதுபற்றி பட்டின சபை ஆலோசனை செய்வதற்காகவுமே இவ்விசேட கூட்டம் கூட்டப்பட்டதென்று தலைவர் அறிவித்தார். எல்லா அங்கத்தவர்களும், விசேடமாக இரண்டாம் வட்டார அங்கத்தவர் சமுகமளியாதபடியாலும் மேற்சொல்லிய சுடுகாடு எடுபட்டால் முதலாம், இரண்டாம், மூன்றும் வட்டார மக்களைப் பாதிக்குமென்றும் அல்லாமலும் வீமன்காமம், தெல்லிப்பளை, மாவிட்டபுர மக்களும் இச்சுடுகாட்டையே பாவித்து வருகிறர்கள் என்றும் தலைவர் கூறினர்.

இவ்விஷயமாக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் 3-3-62-ல் மேற்படி சுடுகாட்டையும் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உள்ள மற்றும் இடங்களையும் பார்வையிட இருப்பதால் எல்லா பட்டின சபை அங்கத்தவர்களும் அரசாங்க அதிபரோடு கலந்து ஆலோசனை செய்வதற்காக கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

---

## வாக்காளர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாண மாவட்ட தேர்தல் உப அதிகாரியால் ஒரு விசாரணை நடத்தப்பட்டது.

முதலாவதாக காங்கேசன் துறைப் பட்டினசபையின் முதலாம் வட்டாரத்திலுள்ள சில பெயர்கள் விசாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன. மூன்றும் வட்டாரத்தில் ஏறக்குறைய முப்பது பெயர்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. உடுவில் தொகுதியில் உ...ளவர்களிலும் சிலர் விண்ணப்பித்திருந்தனர். விசாரணையின்போது மராம அதிகாரிகளும் சமுகமளித்தனர்.

---

## உள்நாட்டு கருவாட்டின் தரம் குன்றியுள்ளது

### மீன்பிடி டைரக்டர் அறிக்கை

கொழும்பு, புதன்

உள்ளூரில் தயாரிக்கப்படும் கருவாட்டின் தரம் குன்றியுள்ளதாகவும், கருவாட்டில் ஈரலிப்பு இருப்பதால் விரைவில் கெட்டுப்போய் விடுகிறதாகவும் மீன்பிடி டைரக்டர் திரு. டி. டி. பொன்சேக்கா காணிவிவசாய அமைச்சருக்கு அனுப்பியுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

நிறை கூடுதலாக இருப்பதற்காகப் போதிய அளவுக்கு கருவாடு காயவிடப்படுவதில்லை என்றும், கருவாட்டில் மண் சேர்க்கப்படுகிறதெனவும் டைரக்டர் திரு. பொன்சேக்கா உள்நாட்டு கருவாட்டு உற்பத்தி பற்றிக் குறிப்பிட்டுள்ளார். டைரக்டரின் புள்ளி விவரப்படி கடந்த 4 வருடங்களுக்கான உள்ளூர் கருவாட்டு உற்பத்தி வருமாறு:-

1958-ல் 110,484 அந்தர். 1959-ல் 101,713அந்தர்.1960-ல் 118,032 அந்தர். 1961-ல் 144,853 அந்தர்.

---

## இறப்பும்பிறப்பும் ஒரே காரில்!

களுத்துறை, புதன்

பிரசவவேதனையுடன் ஒரு பெண் ஆஸ்பத்திரிக்கு காரில் சென்று கொண்டிருந்தபோது அவர் சென்றுகொண்டிந்த கார், லொறி ஒன்றுடன் மோதியதால் வீரசிங்கபியதாசா என்னும் 18 வயது வாலிபன் ஸ்தலத்திலேயே மரணமானன் காரில் பிரசவவேதனையுடன் சென்று கொண்டிருந்த பெண் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தார்.

பி. ஸி. எல்ஸிநோனு(35) பி. எஸ்லின் (25) டபிள்யு. சேமன் ஹாமி (37) ஆகிய மூவருக்கும் படுகாயமேற்பட்டது.

லொறிச்சாரதி டி. டொவில் பேர்ட் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

நான் விடியற்காலை மாத்தறைக்கு லொறியைச் செலுத்திக் கொண்டு சென்றபோது சுமார் 5 மணியளவில் எதிர்ப்புறமாக ஒருகார் வருவதைக் கண்டேன். கரைத்தொடர்ந்து ஒருபஸ வந்து கொண்டிருந்தது. எதிராக வந்துகொண்டிருந்த கார் திடீரென வீதியின் நடுவே வந்து எனது லொறியின் ஒரு பகுத்தில் மேதியது.

நான் கீழ் இறங்கி காரினுள் காயமடைந்திருந்தவர்களை வெளியே எடுகக உதவினேன். அப்பொது ஒருகுழந்தையின் அழுதரலையும் கேட்டேன்.

களுத்துறை மாஜிஸ்திரேட் உத்தரவின் பிரகாரம் வழக்கறிஞர் திரு. ஏலியன் எபேர்ட் ஜே. பி யு எம் விசாரணை நடத்தினர்.

திரு. எபேர்ட் கார் சாரதியை ரூ 100 பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார்.

---

## தலைமைக் காரியாலயம இடமாற்றம்

கொழும்பு, புதன்

கொழும்பு பௌதத வாலிபர் சங்கக் கட்டிடத்தில் நடைபெற்றுவந்த மககள்கிவங்க் தலைமைக் காரியாலம் யூனியன்பிளேஸிலுள்ள ரத்னமஸ ஆஸபத்திரிக் கட்டடத்துக்கு இவவாரம் இடமாற்றம் செய்யப்படும்.

இதே சமயத்தில் மக்கள் வங்கியின ஒரு புதிய கிளையும் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

காலியிலும் நாளைய தினம் ஒரு புதிய கிளை ஆரம்பிக்கப் படவிருக்கிறது.

---

ஆசிரியருக்குக் கடிதம்

## எங்கள் கதி என்ன?

ஐயா,

சென்ற சில காலமாக தொழிற்கந்தோர்மூலம் அல்லாமல் வேறு முறைகளில் தொழிலாளர்களை எடுத்து வேலைக்கு அமர்த்தி இருக்கிறர்கள். ஆகவே தொழிற் கந்தோரில் வேலை இல்லாமல் பதிந்த என் போன்ற எண்ணற்ற தொழிலாளர் கதி என்ன? நான் 1959-ம் ஆண்டு தொடக்கம் தொழிற் கந்தோரில் இ. போ. ச. கண்டக்டர் வேலைக்குப் பதிந்துள்ளேன். முன்பு பஸ கம்பனியிலும் வேலை செய்துள்ளேன். பல ஆண்டு அனுபவம் பெற்றுள்ளேன். இப்போது இ. போ. ச, தனிப்பட்ட முறையில் தொழிலாளரை வேலைக்கு அமர்த்தி இருக்கிறர்கள். இனிமேல் தொழிற் கந்தோர் மூலமாகவே தொழிலாளரை எடுத்தாற்ருன் என் போன்ற எண்ணற்ற தொழிலாளரின் குறைகளைத் தீர்க்கலாம். இந்த முறையை தொழில் மந்திரியும் போக்குவரத்து மந்திரியும் மிக விரைவில் நடைமுறைக்குக் கொண்டு வருவார்களென நம்புகிறேன்.

சரவணை க. இ. கந்தையா

---

## வைத்தியேஸ்வர சுவாமி கோயில் மகோற்சவம்

### இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம், திருவண்ணை நகர், ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தியேஸ்வர சுவாமி கோவில் திருவிழா இன்று ஆரம்பமாகிறது.

இன்று இரவு 7 மணிக்கு துவஜ படமெடுத்துஅநுக்ஞை, ஸ்ரீ விக்னேஸ்வர பூஜை வாஸ்து சாந்தி நடைபெறும். தொடர்ந்து 28 நாட்களுக்கு நடைபெறும் திருவிழாக்களில் 12-ம்திகதி சந்திரசேகரப்பட்டம் வழங்கும் திருவிழாவும் 20-ம்திகதி தேர்த் திருவிழாவும் 21-ம் திகதி தீர்த்தோற்சவமும் 22-ம்திகதி திருக்கல்யாணத்திருவிழாவும் நடைபெறும்.

உற்சவ காலங்களில் தினந்தோறும் காலை 7-30 மணிக்கு காலசந்தி பூசையும், 9-00 மணிக்கு வசந்த மண்டப பூசையும், மாலை 4 மணிக்கு சாயரக்ஷைப் பூசையும், 5 மணிக்கு இரண்டாங் காலப் பூசையும், இரவு 7-3' மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் நடைபெறும்.

தினந்தோறும் சங்கீத உபந்நியாசங்களும் நடைபெறும். தேர்தீர்த்தம் தவிர்ந்த மற்றைய நாட்கள் பகல் உற்சவம் உள்வீதியில் நடைபெறும்.

---

## டாக்டர் மயக்கமுற்ருர்

அக்கரைப்பற்று, புதன்

முகமது அஸையார், முகமது ஸ்மாயில் ஆகியோரது சடலங்களை பிரேத பரிசோதனை செய்துவிட்டு வெளியே வந்தபோது கல்முனைப்பகுதி சுகாதார அதிகாரி டாக்டர் ஏ. டி நல்லையா மயக்கமுற்ருர்.

யாழ்ப்பாணம்

# மின்சார என்ஜினியர்மீது நீதியற்ற தாக்குதல்?

## ஸ்தலஸ்தாபனசேவை கமிஷனுக்கு புகார்

கொழும்பு, செவ்வாய்

ஸ்தலஸ்தாபன சேவைப் பகுதி, மின்சார என்ஜினியர்கள் சங்கம், தமது சங்க அங்கத்தவர்களுக்குப் பாதுகாப்புக் கோருவதற்கான கடிதம் ஒன்றை ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனின் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ளது. யாழ்ப்பாண நகர சபையில் நிகழ்ந்த சம்பவம் ஒன்றே இக்கடிதத்தை அனுப்பி வைப்பதற்குச் சங்கத்துக்குத் தூண்டுகோலாக இருந்தது. ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனின் தலைவருக்குச் சங்கம் அனுப்பியுள்ள கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-

மின்சார எஞ்ஜினியரை நீதியற்ற முறையில் யாழ்ப்பாண நகர சபை அங்கத்தவர்கள் நகர சபைக் கூட்டத்தில் தாக்கியுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது. நீர்கொழும்பு நகர சபையிலும் எமது சங்க அங்கத்தவர் ஒருவர் தனிப்பட்ட முறையில் தாக்கப்பட்டதும் கமிஷன் அறிந்ததே. ஸ்தலஸ்தாபன சேவையில் ஈடுபட்டு வரும் ஊழியர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷன், எமது சங்கத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்குப் பாதுகாப்புத் தேடுவதற்கேற்ற சட்டங்களை உருவாக்கவேண்டியது இங்கு அவசியமாகின்றது.

யாழ்ப்பாண நகர சபையில் முதல் தடவையாக உள்ளிட்டுள்ள சில புதிய அங்கத்தவர்கள் நகர சபை எஞ்ஜினியரைத் தக்க காரணமின்றிக் குற்றங் கூறுவதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. நீதியற்ற முறையில் தாம் கோரும் ஒரு சில வேண்டுகோள்களுக்கு, எஞ்ஜினியர் இணங்காத காரணத்தினால் நகர சபைக் கூட்டங்களில் எஞ்ஜியருக்கு எதிராக குற்றச் சாட்டுகளைச் சுமத்துகிறார்கள்.

குற்றஞ் சுமத்தப்பட்ட பிரஸ்தாப எஞ்ஜினியர் ஸ்தலஸ்தாபன சேவையில் கடந்த 12 வருட காலமாகக் கடமையாற்றியவர்: தமது கடமையைச் சிறப்பாகவும் பாரபட்சமின்றியும் செய்து வந்த இவர்மீது நகர சபையின் புதிய அங்கத்தவர்கள் நீதியற்ற முறையில் குற்றஞ் சாட்ட முயல்வது சரியல்ல. ஸ்தலஸ்தாபன சேவையில் பிரவேசிக்கும் தகுதியற்ற பலருடன் எதிர்த்துப்போராடி இவர் தமது கடமையைச் செய்து வந்துள்ளார். நகர சபைச் சங்கங்கள் வருடாந்தம் இவருக்கு அளித்து வந்த பாராட்டுக்களே இதற்குப் போதிய சான்றுகளாகும். இவர் யாழ்ப்பாணத்தில் தமது கடமையைச் சரிவரச் செய்ய முடியாவிடில் அதற்குக் காரணம் ஒரு சில நகர சபை அங்கத்தவர்களாகவே இருக்க முடியும். எமது சங்கம் போன்ற ஒரு தொழிற் சங்கம் எஞ்ஜினியர் தொழிலாளரைப் பாதுகாப்பதற்கு எப்போதும் காத்திருக்கிறது என்பதை நகர சபை கீழ் அங்கத்தவர்கள் உணர வேண்டும். மின்சார எஞ்ஜினியர்களுக்கு வேண்டிய பாதுகாப்பளிக்கும்படி ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனை இத்தால் கேட்டுக்கொள்கிறோம்."

இதன் பிரதிகள் யாழ்ப்பாண மேயருக்கும், ஸ்தலஸ்தாபனக் கமிஷன் அங்கத்தவர்களுக்கும், இலங்கை அர்பன் சபைகள் சங்கத் தலைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன

## வாசிக்கும் பழக்கம் விருத்தியுற வேண்டும்

ஹன்வலை, செவ்வாய்

கிராமப் புறங்களிலுள்ள மக்கள் வாசிக்கும் பழக்கத்தை விருத்தி செய்துகொள்ளும் வகையில் நாம் அவர்களை ஊக்குவிக்க வேண்டும். ஒவ்வொரு கிராமசபையும் இப்பணியில் ஈடுபட்டால் கிராமப்புற மக்களின் முன்னேற்றத்துக்கு இது பெரிதும் உதவுவதாக இருக்கும்

இவ்வாறு ஹன்வலை பெருவ கிராமசபையயால் ரூ. 5000 செலவில் கட்டப்பட்ட நூல் நிலையமொன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் மேற்கு மகாண ஸ்தலஸ்தாபன கமிஷனர் திரு. எம். ஸி. ஸி. பெர்ரோண்டோ குறிப்பிட்டார்.

திரு. என். கே. வெலிக்கல பேசுகையில் ஜனநாயகத்தின் தத்துவத்தை உண்மையாகப் பொதுமக்கள் உணர்ந்தால் தான் நாடு விருத்தியடையும் எனக் கூறினர்.

ஹன்வலை பெருவ கிராம சபையின் தலைவர் திரு. சுகாதன் எதிரிசிங்கி, திரு டி. டி. ஹிரிபிட்டியா ஆகியோரும் பேசினர்

# 512 றுத்தல் சுறுமீன்

தொடந்துவை, செவ்வாய்

தொடந்துவையைச் சேர்ந்த மீன் பிடியாளர் மூவர் 512 றுத்தல் எடையுள்ள ஒரு சுறுமீனைப் பிடித்தார்கள். உள்ளூர் மீன் வியாபாரி ஒருவருக்கு இந்தச் சுறுமீனை 400 ரூபாவுக்கு அவர்கள் விற்ருர்களாம்.

---

## யானை விரட்டல் பின்போடப்பட்டது

தெதுருஓயா, புதன்

போதுமான இராணுவ வீரர்கள் கிடைக்காத காரணத்தால் தெதுருஓயாவில் யானை விரட்டும் வேலை தற்பொழுது பிற்போடப்பட்டுள்ளது.

இவ்வருடம் ஆகஸ்ட் மாதத்தில் யானைவிரட்டல் வேலை ஆரம்பிக்கப்படலாமெனத் தெரிகிறது.

யானை விரட்டும் பகுதி நிர்ணயிக்கப் பட்டுவிட்டதென்றும் இதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்றுவருவதாகவும் வனபரிபாலன இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகளும் கார்டுகளும் இப்பொழுது சிலாபத்தில் இதற்கான அலுவல்களைக் கவனிக்கத் தங்கியிருப்பதாகவும் தெதுருஓயா யானைவிரட்டுதற்கான திட்டக்கமிட்டித் தலைவர் தெரிவித்துள்ளார்.

சில்லாலை கொலை முயற்சி வழக்கு

# எதிரியை 2 வருட நன்னடத்தையில் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம், செவ்வாய்

"முடிக்குரிய தரப்பில் கூறப்பட்டவை உண்மையானவையாகத் தோன்றவில்லை. எதிரி தரப்பில் கூறப்பட்டவற்றை நான் ஏற்றுக்கொள்கிறேன். தற்பாதுகாப்புக்காகவே இக்கொலைமுயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். ஆனால் அதைகூடுதலாக உபயோகித்துவிட்டாய்" என நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு தம்பையா சில்லாலை கொலை முயற்சி வழக்கில் எதிரியை இரண்டுவருட நன்னடத்தையில் கொந்தப்பிணையில் செல்லுமாறு உத்தரவிடுகையில், எதிரியைப் பார்த்துக் கூறினர்.

சில்லாலையைச் சேர்ந்த ஏ. சவரிமுத்து என்பவரை 13-ம் திகதி ஜூலை மாதம் 1960-ம் ஆண்டு உலக்கையால் தலையில் அடித்து கொலைசெய்ப முயற்சித்ததாக அதியாம்பிள்ளை மோசஸ் மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு வடபகுதி அசைஸ நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டது. முடிக்குரிய தரப்பில் திரு. பி. நகுலேஸ்வரன் ஆஜரானர்.

எதிரி தரப்பில் திரு. டி கணேசலிங்கம் திரு. டி கனகசிங்கத்தின் உதவியுடன் திரு. எஸ். நடராசாவின் அனுசரணையுடன் ஆஜரானர்.

அதிரியாம்பிள்ளை சவரிமுத்து சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:-

"1960-ம் ஆண்டு ஜூலைமாதம் 13-ம் திகதி நான் எனது வயலுக்குச் சென்றுகொண்டிருக்கும் போது எதிரியின் மைத்துனர் எனது மடியில் பிடித்து 50 அடிதூரத்திற்கு ஒழுங்கை ஒன்றின் வழியே இழுத்துக்கொண்டு சென்றார். அப்போது எதிரி உலக்கையொன்றுடன் வந்து அதனால் எனது தலையில் அடித்தார். நான் உடனே மயக்கமுற்று கீழேவிழுந்துவிட்டேன். ஆஸ்பத்திரியில் அறிவு தெளிந்தேன். அப்போதுதான் போலிசாருக்கு வாக்கு மூலமளித்தேன்.

எதிரி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணைக்குப் பதிலளிக்கையில் எதிரியின் மைத்துனரான ஸ்ரீதாம்மைப்பிள்ளைக்கு காயமேற்பட்டது எப்படி என்றது தனக்குத் தெரியாதெனவும் பாவிலுப்பிள்ளைக்கும் காயமேற்பட்டது எப்படி என்பது தனக்குத் தெரியாதென்றும் கூறினர்.

எதிரி காயம் விளைவித்தது குறைந்தபடி குற்றஞ் செய்ததை ஒப்புக்கொண்டார்.

இதை நீதியரசரும் ஜூரர்களும் ஏற்றுக்கொண்டு மேற்கண்டவாறு தீர்ப்பளித்தார்.

---

## பிரத்தியேக கங்காணிகள்

### நோயாளருக்கு அனுமதி

கொழும்பு, புதன்

அரசாங்க ஆஸ்பத்திரிகளிலுள்ள நோயாளர் தமக்கென பிரத்தியேகமாக கங்காணிகளை வைத்துக்கொள்வதற்கு சுகாதார இலாகா தற்பொழுது அனுமதியளித்துள்ளது.

1957-ம் வருடம் மார்ச் மாதத்திலிருந்து சில தவிர்க்கமுடியாத காரணங்களுக்குமட்டுமே இவ்வாறு பிரத்தியேகமாக கங்காணிகளை நோயாளர் அமர்த்திக்கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தது. தற்பொழுதுள்ள விதியின் பிரகாரம் அரசாங்கம் விசேஷ கங்காணிகளென வகுத்துள்ள கங்காணிகளை நோயாளர் தம்மைக் கவனித்துக் கொள்ள அமர்த்திக்கொள்ளலாம்.

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறிய கங்காணிகளையும் ஆஸ்பத்திரியிலுள்ள விசேஷ கங்காணிகளையும் நோயாளர் அமர்த்திக் கொள்ளலாம்.

இந்த விசேஷ கங்காணி ஒருவருக்கு நாளொன்றுக்கு நோயாளர் ரூ. 2 சம்பளமாகக் கொடுக்க ...


மாமைட் பலமும் சுகமும் தருகிறதால் நானும் என் கணவரும், என்பிள்ளைகளும் மாமைட் அருந்துகிறோம் — இதைக் கவனிப்பது என் கடமையாகும்.



இவர்கள் யாவரும் நன்றாய் சாப்பிடுகிறார்கள். அதிக சக்தியும் பெலனும் உள்ளவர்களாய் இருக்கிறார்கள். பலத்திற்கும் வீர்யத்திற்கும் உங்கள் தினசரி ஆகாரத்தில் ஒரு பாகமாக நீங்கள் மாமைட்டை தினசரி அருந்தி வர வேண்டும்.

மாமைட் வெந்நீரில் அருந்தப் படலாம். உங்களுக்கு விருப்பமானல் கொஞ்சம் எலுமிச்சம் பழச்சாறும் சேர்த்து அல்லது தாளித்துச் சாப்பிடலாம். மாமைட்டை ரொட்டியிலோ அல்லது பிஸ்கட்டிலோ பட்டரோடு அல்லது பட்டரின்றி இலேசாகத் தடவி சாப்பிடலாம். மாமைட்டை சுப் கறி முதலியவற்றில் சேர்க்கும்போழுது அதிகப்படியான ருசியை மட்டுமின்றி உங்கள் தினசரி ஆகாரத்தைச் சமைக்கும பொழுது தேவையான விட்டமின் பி சத்துக்களையும் கூட்டிக் கொள்கிறீர்கள்.




மாமைட் பி வர்க்க விட்டமின்களை ஏராளமாகக் கொண்ட ஓர் காய்கறி ஆகாரம்

AT-796

மாமைட்

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

வியாழன் 1-3-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-30 திரை இசை, 8-00 புல்லாங்குழல், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 பாங்கு, 6-45 வயலின்.

இரவு 7-00 பேச்சு, 7-15 நேயர்விருப்பம், 7-45 டாக்டர் இரஞ்சிதம் - தொடர் நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 லயவின்யாசம், 9-30 குரல் வகை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்.)

### திருச்சி

(செய்திகள் காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-00 விசேஷ தேர்தல் செய்தி, 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 சகுந்தலா ஜகதீஸ் - பாட்டு.

பகல் 12-00 விசேஷ தேர்தல் செய்தி, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 சகுந்தலா ஜகதீஸ் - பாட்டு, 1-30 வாத்தியஇசை, 1-50 குரல்இசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை 4-30 விசேஷ தேர்தல் செய்தி, 5-00 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப் பாடல், 7-35 ராஜி பங்குசாமி - பேச்சு, 7-45 ராகம், தானம், பல்லவி (சென்னை அஞ்சல்), 8-40 திரைப்படஇசை, 9-45 ரேடியோ நாடகஇசை, 9-30 அகிலபாரத இலக்கியநிகழ்ச்சி.

## அக்கரைப்பற்று துப்பாக்கிப்பிரயோக விசாரணை

அக்கரைப்பற்று, பெப். 27

சென்ற சனிக்கிழமையன்று அக்கரைப்பற்று பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் மாண்டது பற்றி மாஜிஸ்டிரேட் திரு.பி.ஜி.எஸ. டேவிட் நேற்றுவிசாரணை ஆரம்பித்தார். அந்த சம்பவத்தில் முகம்மது அசனார், முகமமது இஸமாயில் இவ்விருவரும் துப்பாக்கிக் காயத்தால் மாண்டனர்.

அக்கரைப்பற்று பொலிஸ ஸடேஷன் அதிகாரி எச்.ஆர்.டி. ஸில்வாவும், ஆசிரியரான பி.பி. எஸ. மீராவும் சாட்சியமளித்தனர். பொலிஸ அதிகாரி கூறியதாவது:- சனிக்கிழமை மாலை கான்ஸடபிள் செனவிரத்ன 50 ரூபாய் மாற்றுவதற்காக சாதாரண உடையில் கடைக்குச் சென்றார். சிறிது நேரம் கழித்து, லொறி டிரைவர் ஏ.எல். ஜெயசூரியா ஸடேஷனுக்கு வந்து கடையில் ஒரு கான்ஸடபிள் தாக்கப்படுவதாய்த் தெரிவித்தார். உடனே 5 குண்டாந்தடி பொலிசாரையும் 2 துப்பாக்கிப் பொலிசாரையும் அழைத்துக் கொண்டுகடைத் தெருக்குச் சென்றேன். கான்ஸடபிள் செனவரத்ன கிழிந்த சட்டையுடன் இருப்பதையும் ஒரு கூட்டம் அவரைப் பின் தொடருவதையும் கண்டேன். கூட்டத்திலிருந்த ஒரு ஆள் தான் தன்னை அடித்தாரெனச் செனவிரத்ன தெரிவித்தார். அந்த ஆசாமியை தான் பிடித்து அழைத்துச் சென்றேன். பெரிய கூட்டம் அவரை விடுதலை செய்யும் படி கேட்டனர். கற்களும் வீசப்பட்டன. இதனால் இரு கான்ஸடபிள்களான பாலசுப்பிரமணியம், வேலாயுதபிள்ளை இவர்களுக்குக் காயம் பட்டது. பொலிஸடேஷனை நோக்கி கூட்டத்தார் ஒரு வெடி சுட்டதும், ஒரு முறை சுடுமாறு இரு கான்ஸடபிள்களுக்கும் உத்தரவிட்டேன். பிறகு கூட்டம் கலைந்தது."

விசாரணை நடந்து வருகிறது.

# "திருக்குறள் மணிப்பட்டம்" வழங்கப்படும்

## தமிழ் மறைக்கழக அலுவலாளர் தெரிவு

யாழ்ப்பாணம், புதன்

அண்மையில் நடைபெற்ற தமிழ்மறைக் கழகத்தின் பதின்ைராவதுஆண்டுக் கூட்டத்திலே தேர்வு நடத்தித் "திருக்குறள்மணி" என்னும் பட்டத்தை வழங்கவேண்டுமென்று முடிவுசெய்யப்பட்டது. இத் தேர்வில் இரு பகுதுகள் உண்டெனவும் முதலாவது பகுதி திருக்குறளின் பொருள் பற்றியது எனவும் இரண்டாவது பகுதி திருக்குறள் ஆய்வுபற்றிய தெனவும் அறியப்படுகிறது.

இக் கூட்டத்தில் பின்வருவோர் அடுத்த ஆண்டு அலுவலர்களாகவும் ஆட்சிமன்ற உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர் திரு. கா. பொ. இரத்தினம், செயலாளர் பண்டிதர் செ. சிவலிங்கம், துணைச் செயலாளர் சி. மதியாபரணம், பொருளாளர் விதுவான் இ. சி. சோதிநாதன, ஆட்சிமன்ற உறுப்பினர்கள்: திருவாட்டிகள மகேசுவரி பாலகிருஸணன், க.செல்லத்துரை, செல்வி நா. காசிப்பிள்ளை, திருவாளர்கள்: இ. இரத்தினம், ஆ. கந்தையா, எஸ். எம். கமால்தீன், பணடிதர் த. பொ. கார்த்திகேசு, ச. சரவணமுத்து, சி. த. சிவநாயகம், ஆ. க. சுப்பிரமணியம், வ. நடராசா, பண்டிதர் குக. வயிரநாதன், வித்துவான் நீ. மே. யோ. வேதநாயகம.

தமிழ்மறைக்கழக உறுப்பினராயிருந்த கலைப்புலவர் நவரததினத்தின் மறைவுக்குக் கழகத்தின் பரிவைத் தெரிவிக்கும தீர்மானமும் நிறைவேற்றப்படடது.

## வீதியோரத்தில் பிரசவம்

பளை, புதன்

பிரசவ வேதனையால் அவஸ்தைப்பட்ட மனைவியை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல மோட்டார் காருக்குச் சென்ற கணவனைத் தொடர்ந்து மனைவியும் பின் தொடர்ந்தார். ஆனால் பளை புகையிரதநிலையத்திற்கருகாமையில் அவர் திடீரெனப பிரசவித்தார். இரண்டு மைல்களுக்கப்பாலுள்ள பளை ஆஸ்பத்திரிக்குச் செல்லும் வழியில் வீதியில் இச் சம்பவம் நடைபெற்றது. பிரசவத்தின் பின் அவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டார்.

## சனசமூக நிலையத்தில் படக்காட்சி

கோப்பாய், புதன்

சிறுப்பிட்டி பூமகள் சனசமூக நிலையத்தில் பிரித்தானிய தகவல் பகுதியினரால் ஓர் இலவச படக்காட்சி காண்பிக்கப்பட்டது. இப்படக்காட்சிககு பெருந்திரளான மக்கள் சமூகம் கொடுத்திருந்தனர்.

## நியூ ராஜா கழகம் வெற்றி

தெல்லிப்பளை, புதன்

கட்டுவன் ஞானோதய விளையாட்டுக்கழகத்திற்கும் தெல்லிப்பளை நியூராஜாக்கழகத்திற்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் நியூராஜா முதல் ஆட்டத்தில் 77 ஓட்டங்களும் இரண்டாவது ஆட்டத்ல் 98-ம் பெற்று, முதல் ஆட்டத்தில் 60 ஓட்டங்களும் இரண்டாம் ஆட்டத்தில் 77 ஓட்டங்களும் பெற்ற ஞானோதய விளையாட்டுக்கழகத்தை 38 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

## மாணவருக்கு தொழிற்பயிற்சி அவசியம்

### அரசாங்க அதிபர் வற்புறுத்து

வவனியா, புதன்

ஓமந்தை மகாவித்தியாலயப் புதுக்கட்டடத்திறப்பு விழா வவனியா பாராளுமன்ற உறுப்பினர் திரு. தா. சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்றது. கட்டிடத்தை வவனியா அரசாங்க அதிபர் திரு. செனவிரத்ன திறந்து வைத்தார். திரு. செனவிரத்ன பேசுகையில் கூறியதாவது:- இன்று ஆசிரியர்கள் பிள்ளைகட்குப்படிப்பிக்கும்போது பிள்ளைகளின் சூழலை அறிந்து அதற் கேற்ப படிப்பிக்க வேண்டும் அத்துடன் பாடசாலைகளில் பிள்ளைகட்கு தொழிற்பயிற்சிகள் அளித்தல் மிகவும் பிரதானம் இதனால் இன்றைய வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும் முடியும்.

அடுத்து தலைவர் தமது உரையில் இம்மகாவித்தியாலயத்தில் உள்ள குறைகளைத் தாம் ஓரளவில் அறிவதாகவும் இதற்கு தன்னாலான ஒத்துழைப்பைத்தருவதாகவும் கூறினர்.

வவனியா வித்தியாதிகாரி திருமதி ஆர். நவரத்தினமும் பேசினர்.




# கெட்டியான உணவு அருந்துவதற்கு

## உங்கள் குழந்தையை சிறந்தமுறையில் பழக்கிவிட்டீர்களா?

அப்படியாயின் நீங்கள் ஞாபகத்தில்வைத்திருக்க வேண்டியவை இவையே

★ ஐந்து மாதங்களுக்குப்பின் தாமதிக்காது கெட்டியான உணவை சேர்த்துக்கொடுக்க வேண்டும்.

★ உணவை மாற்றும் பொழுது படிப்படியாக மாற்ற வேண்டும்.

★ நன்ருகச் செரிக்கக்கூடிய கெட்டியான உணவை முதலில் தேர்ந்தெடுக்கவேண்டும்.



மூன்றிலிருந்து நான்கு மாதங்கள்தான் அநேகமாக கெட்டியான உணவு சேர்த்துக் கொள்ள வேண்டிய காலம். 50 வருடங்களுக்கு மேலாக பார்லீஸ் ரஸ்குகள்தான் பாலுடன் சேர்த்து ஊட்டக்கூடிய கெட்டியான உணவும் இலகுவில் செரிக்கக் கூடியதும் என தாய்மார்கள் உணர்ந்து வந்துள்ளார்கள்.



பார்லீஸ் தானியப்பொருள்கள், கனிப் பொருள்கள் விட்டமின்சத்து இவை சமமாக உடைய உணவு. இந்த உணவு மிகவும் இலகுவாக செரித்துவிடும்.

பார்லீஸ் தயாரிப்பதற்கு மிகவும் இலகுவானது. சூடான பாலுடன் கலக்கவேண்டியது. அவ்வளவுதான்.




FARLEY'S

பார்லீஸ்

குழந்தைகளின்
முதல் கெட்டியான உணவு

## மேடை மாறிய வேடிக்கை!

பிரபல சினிமா பாடலாசிரியர் கவிஞர் கண்ணதாசன் சமீபத்தில் தேர்தல் பிரசாரம் செய்ய ஈ. வெ. கி. சம்பத்துடன் அரியலூர் தொகுதியிலுள்ள ராயபுரம என்ற ஊருக்குப் போனார். அங்கு மேடை அலங்காரம் செய்யப்பட்டு மக்கள் பேச்சாளர்கள் வருகைக்காக காத்திருந்தனர். கண்ணதாசனும் சம்பத்தும் மேடையில் ஏறி பேசிவிட்டு இறங்கும் போது ஒருவர் ஓடி வந்து "ஐயா ஐயா என்ன இது? காங்கிரஸ் மேடையில் வந்து நீங்கள் பேசிவிட்டுப் போகிறீர்கள்!" என்றார். அப்போது தான் கண்ணதாசன், சம்பத் ஆகியோருக்கு தாங்கள் பேசியது காங்கிரஸ் மேடை என்று தெரிந்ததாம்.

# கலை அரங்கம்

## ஒரு திரைச்சீலைக்கு ரூ. 50,000 செலவு

"முகலே ஆஜம்" தயாரிப்பின் மூலம் தமது திறமையை நிரூபித்த பிரபல தயாரிப்பாளர் ஸ்ரீ கே. அஸிப் மீண்டும் ஒரு முறை தனது திறமைக்கு எடுத்துக்காட்டாக "லைலா மஜ்னு" கதையை படமாக்க திட்டமிடுள்ளார். அவர் அதற்காக ரூ. 50,000 செலவில் லைலா இருக்கும் மாளிகையை அலங்கரிக்க வென்று பம்பாயிலுள்ள பிரபல ஓவியர் களைக்கொண்டு ஒரு பெரிய திரைச் சீலையை எழுதி வருகிறார். அச்சீலையில் விலையுயர்ந்த முத்துக்களையும் ஜரிகை பட்டுநூலும் பதிக்கப்பட்டிருக்குமாம். இந்தத் திரைசீலை நான்கைந்து மாதங்களாகத் தயாராகி வருகிறது.

டைரக்டர் ஜைடி தன்பங்குக்கு லைலாவின் மாளிகையை ஒரு கலைக்கூடமாக நிறுவ முயன்று வருகிறார்.

இந்தப்படத்தில் லைலாவாக நிம்மி நடிப்பார். மஜ்னு இன்னும்கிடைக்கவில்லையாம். தயாரிப்பாளர் அஸிப் எகிப்திய நாட்டிற்குச் சென்று சிலஅரபு இசைகளையும் இப்படத்திற்காக ஒலிப்பதிவு செய்துவர திட்டமிட்டிருக்கிறார்.

மேலும் இப்படத்தை ஒரு திரைக காவியமாக ஆக்க ஒப்பற்ற நடிகர்களான பிருத்திராஜ், ஆகா, நஸீர்உசேன், ஜயந்த், லலிதாபவர், மதுபாலாவின் தங்கையான சஹிதா இவர்களை முக்கியமனபாத்திரங்களாக நடிக்க ஒப்பந்தம் செய்துள்ளார். இப்படம் சினிமாஸ்கோப் முறையில் ஈஸ்ட்மேன் கலரில் படமாக்கப் படும்.

தேவிகா பிரதம பாகத்தில் நடிக்கிறார்கள் பி. ஆர். பந்துலு டைரக்ட் செய்கிறார்.

## ஞானவைரவர் கோவிலில் சிவராத்திரி விழா

தெல்லிப்பழை, புதன்

தெல்லிப்பழைகிழக்கு, கவளாவத்தை ஞானவைரவர் சுவாமி கோவிலில் வரும் ஞாயிற்றுக் கிழமை சிவராத்திரி தினத்தை முன்னிட்டு விசேஷ பூசையும், அபிஷேகமும், வழிபாடுகளும் நடைபெறவிருக்கின்றன.

அன்று மாலை 4 மணி தொடக்கம் நடைபெறவிருக்கும் இத்தெய்வவழிபாட்டில் யாழ்ப்பாணம் உயர்தர நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் உரை நிகழ்த்துவார். 'சிவராத்திரி மகிமை' பற்றி திரு பொ கருணாகரர் உபநியாசம் செய்வார் 'திருமாறநாயனார் சரிதம்' பற்றி பண்டிதர் வே. சங்கரப்பிள்ளையும் 'கண்ணப்ப நாயனார் சரித்திரம்' பற்றி திரு. வி. க. ஆறுமுகம் கதாகாலட்சேபம் செய்வார்கள்.

சங்கீதக் கச்சேரிகளும், புல்லாங்குழற் கச்சேரிகளும், மேளவாத்தியக் கச்சேரிகளும், கூட்டுப் பிரார்த்தனைகளும் நடைபெறும்.

அடுத்த தினமான திங்கட் கிழமையன்று காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை மகேஸ்வரபூசை (அன்னதானம்) நடைபெறும்.

## காணிகளை எடுத்துக்கொள்ள புதிய சட்டம்

கொழும்பு, புதன்

அரசாங்கம் தனக்குத் தேவையான காணிகளை விரைவில் எடுத்துக் கொள்ளவும், அதற்கான நஷ்ட ஈடு பற்றி நிர்ணயிக்கவும் வகை செய்யும் புதிய சட்டமொன்றை விரைவில் கொண்டுவர" அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

ஸ்தலஸ்தாபன, வீடமைப்பு அமைச்சின் பார்லிமெண்டரி ஆலோசனைக் கமிட்டியின் ஆலோசனைப்படியே இச்சட்டம் இயற்றப்படவிருக்கிறது என ஸ்தலஸ்தாபன அமைச்சு தெரிவித்துள்ளது.

காணிகள் எடுப்பதில் தாமத மேற்பட்டதால் பல அவசர வேலைகள் தாமதமாகிவிட்டதாகவும் இதனால் பொது மக்கள் குறைபட்டுக் கொண்டதாகவும் கமிட்டி சுட்டிக்காட்டியுள்ளது.

### நன்றி

எனது தகப்பனார் த. முத்துத்தம்பிபென்ஷனியர், தொண்டமானாறு, அவர்களின் அந்திய கால ஈமச்சடங்கிற்குச் சமூகம் கொடுத்தும் அனுதாபச் செய்தியும் அனுப்பிய பெரியோர்களுக்கும் நண்பர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்ஙனம்,
மு. தருமரெத்தினம்.

## எம். ஜி. ஆரின் முதல்மனைவி காலமானார்

### சிவாஜி துக்கம் விசாரித்தார்

புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனின் முதல் மனைவி சதானந்தவதி சென்ற ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

36 வயதான திருமதி சதானந்தவதி சில மாதங்களாக க்ஷயரோகத்தினால் பீடிக்கப்பட்டிருந்தார் ஒரு வாரத்துக்கு முன் அவரது நிலைமை மோசமடைந்தது. ஞாயிறு காலையில் அவர் மரணமானார்.

15 வருடங்களுக்கு முன் எம். ஜி. ராமச்சந்திரன் சதானந்தவதியை திருமணம் செய்து கொண்டார்.

மனைவி இறந்ததும் எம். ஜி. ஆர். கதறி அழுதார்.

மரணச் செய்தி கிடைத்ததும் நடிகர் திலகம் சிவாஜி கணேசன், எம். ஜி ஆரின் இல்லத்துக்குச் சென்று துக்கம் விசாரித்தார். கலங்கிய கண்களுடன் எம். ஜி ஆருக்கு அருகில் உட்கார்ந்து கொண்டார்.

நடிகவேள் எம். ஆர். ராதா, பி. எஸ். வீரப்பா, டி. கே. ராமச்சந்திரன், சிவதாணு, டி. எஸ். துரைராஜ், படத் தயாரிப்பாளர் சின்னப்ப தேவர், டைரக்டர் பந்துலு, கதை வசன கர்த்தா ஏ. பி. நாகராஜன் ஆகியோரும் சென்று துக்கம் விசாரித்தனர்.

தேர்தலில் போட்டியிட்டு முடிவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த தி. மு. கழக பிரமுகர்கள் கே. ஏ. மதியழகனும் சி. பி. சிற்றரசுவும் எம். ஜி ஆர். இல்லத்துக்குச் சென்று துக்கம் விசாரித்தனர்.

### வாழ நினைத்தால் வாழலாம் வழியா இல்லை பூமியில்

#### கண்ணதாசன் பாட்டு

"வாழ நினைத்தால் வாழலாம் வழியா இல்லை பூமியில் ஆழ்கடலும் சோலையாகும் ஆசை இருந்தால் நீந்திவா..." என்று காதலனை காதலி நீச்சலடிக்கக் கூப்பிடும் பாட்டு சமீபத்தில் பத்மினி பிக்சர்ஸ் தயாரிக்கும் "பலே பாண்டியா" என்ற படத்திற்காக கண்ணதாசன் எழுதி, விசுவநாதன் - ராமமூர்த்தி இசையமைத்து, டி. எம். சௌந்தரராஜன்-சுசிலா பாடி பரணி ஸ்டுடியோவில் பதிவாக்கப்பட்டது. இப்படத்தில் சிவாஜி தேவிகா பிரதம பாகத்தில் நடிக்கிறார்கள் பி. ஆர். பந்துலு டைரக்ட் செய்கிறார்.

### "மிஸ்மதராஸ்"

'மிஸ்மதராஸ்' என்ற புதுமையான படமொன்றை ஏ, எல். புரடக்ஷன்சார் அடுத்துத்தயாரிக்கவிருக்கின்றனர். எஸ். எஸ். ராஜேந்திரன், ராஜசுலோசனா, எம். ஆர். ராதா, எம். வி. ராஜம்மா, மற்றும் பலர் இப்படத்தில் நடிக்கவிருக்கின்றனர். இப்படத்தின் பாடல்களை கவிஞர் கண்ணதாசன் எழுதுகிறார்.

### சாந்தாராமின் மகள் கதாநாயகி

பிரபலபடத்தயாரிப்பாளரும் டைரக்டருமான திரு. வி. சாந்தாராமின் புதல்விராஜ்ஸ்ரீ விரைவில் திரைப்படங்களில் கதாநாயகியாக நடிக்கவிருக்கிறார்.

சாந்தாராம் சமீபத்தில் தயாரித்து வெளியிட்ட 'ஸ்திரி' என்றபடத்தில் ராஜ்ஸ்ரீ நடனமாடியுள்ளார். சாந்தாராம் அடுத்து தயாரிக்கும் அடுத்தபடத்தில் ராஜ்ஸ்ரீ கதாநாயகியாக நடிக்கவிருக்கிறார்.

## பிரபல "நடிகையை" ஏலம்போட சாந்தாராம் முடிவு

### 'ஆனையைக்கட்டி தீனிபோட முடியுமா?'

வினோதமான செய்தியாக இருக்கின்றதா? ஆனால் இது உண்மை. பிரபல திரைப்படத் தயாரிப்பாளர் ஸ்ரீ சாந்தாராமே சொன்னார். அந்த நடிகையை வைத்துக் கட்டுபடியாகாமலேயே ஏலமிடப்போவதாக அவர் தெரிவித்தார். அந்த நடிகையைவைத்துப் பராமரிக்கவும், தக்க இடவசதியளிக்கவும் தம்மால் இயலவில்லை என்றும், உடனடியாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவே இந்த முடிவுக்கு தாம் வந்ததாகவும் அவர் கூறினார்.

அந்த நடிகை வேறு யாருமல்ல. ராமச்சந்திரா என்ற 10 அடி உயரமுள்ள பெண் யானைதான். மூன்றாண்டு காலமாக ஓரிரண்டு படங்களில் தான் இதற்கு சான்ஸ் கொடுக்க முடிந்ததாம். இந்த யானையினால் செலவு அதிகமாகின்றதாம். ஒருநாளைக்குமட்டும் 40 ருத்தல் கரும்பும், 25 ருத்தல் அரிசியும், 25 தென்னை ஓலையும், 10 ருத்தல் பனை வெல்லமும், 200 வாழைப்பழமும் கொடுப்பதென்றால் யாரால் தான் அதைக் கட்டிச் சமாளிக்கமுடியும்? சாந்தாராமின் முடிவு இப்போதாவது சரியானது என்பதை ஒப்புக்கொள்கிறீர்களா?

அந்த யானைக்கு 25 வயதாகிறது. நீச்சல் குளத்தருகே சதா இருக்குமாம். இதற்கென்று ஒரு பாகனும் இரண்டு வேலையாட்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்

ராஜ்கமல் ஸ்டுடியோவில் திரைக்கென்றே பழக்கப்பட்ட இந்த யானை நடனமாடும், கால் பந்துவிளையாடும், சர்க்கஸ் வேலைகள் எல்லாம் இதற்கு நன்றாகத் தெரியும். "ராமச்சந்திரா" என்ற இந்த யானையின் சாப்பாட்டுபில் மட்டும் சென்ற மூன்றாண்டில் ரூபா 72,000ம், பணியாளர்களின் சம்பளமாக ரூ. 18,000ம் செலவாகியுள்ளது. ஆனால் அதை வாங்கின விலை ரூபா 15,000 தான்.

### கெய்ரோ திரைப்பட விழா

இவ்வருடம் ஏப்ரல் மாதத்தில் கெய்ரோவில் நடைபெறவிருக்கும் இரண்டாவது ஆசிய ஆபிரிக்கத்திரைப்படவிழாவில் கலந்துகொள்ள திரைப்படத் தொழில் அதிபர்கள் திரு. பி. நாகிரெட்டியும், திரு, ஏ. எல். சீனிவாசனும் செல்வார்களெனத்தெரிகிறது.

### ஜெமினியின் புதிய படம்

ஜெமினி படநிலையத்தார் புதிய இந்திப் படமொன்றைத் தயாரித்து வருகின்றனர். இப்படத்தில் நடிகை வைஜயந்திமாலா, ராஜேந்திரகுமார், பிருதிவிராஜ் ஆகியோர் நடித்த காட்சி சமீபத்தில் படமாக்கப்பட்டது. இப்படத்தை ராமானந்தசாகர் டைரக்ட் செய்து வருகிறார்.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

பிளாஸா (வெள்ளவத்தை) கெபிட்டல் (கொழும்பு) வெம்பிளி (கண்டி)

விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை) சஹாரா (சிலாபம்)

மனோகர், வீரப்பா, ஈ. வி. சரோஜா, ராஜசுலோசனா நடித்த




2-வது மாதம்!

கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

மற்றும் 10 தியேட்டர்களில்

சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, நடித்த

பாசமலர்

மனோகரா (யாழ்ப்பாணம்)

சிவாஜிகணேசன் பத்மினி நடித்த

தூக்கு தூக்கி


... பத்திரிகை ஈழநாடு லிமிடெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேல வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு மார்ச் மாத 1-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.